# ஊழிய அறிக்கை

## நான்காம் காலாண்டு, 2026

## டிரான்ஸ் - யூரோப்பியன் டிவிஷன்




**தென்கிழக்கு இந்திய ஒன்றியம்**

செவந்த் - டே அட்வென்ட்டிஸ்ட் திருச்சபை

197, ஜீ. எஸ். டி. சாலை

வண்டலூர், சென்னை 600 048

அக்டோபர் 3, பக்கம் 7

1

## ஹெல்சின்கியின் தெருக்களில் ஒரு குடும்பம்

**ஜென்னி**

*தேவனுடனும் தனது குடும்பத்தினருடனும் நேரத்தைச் செலவழித்தாள்.*

அக்டோபர் 10, பக்கம் 10

2

## ஒவ்வொரு அடியும் ஒரு போராட்டம்

**ஜோ**

*அவனது இதயத்தில் ஒரு வார்த்தை ஆழமாகப் பதிந்தது: அது ‘ஜெபி’ என்பதுதான்.*

அக்டோபர் 17, பக்கம் 13

3

## என் வாழ்க்கையை மாற்றும்

**மிகேல்**

*அந்த அனுபவம் அவனது ஊழியப்பணியின் தொடக்கமாக அமைந்தது.*

அக்டோபர் 24, பக்கம் 16

4

# நான் ஒருபோதும் தனிமையில் இல்லை

**போதகர் டேரியோ**

*‘தேவனே, நான் ஆயத்தமாக இருக்கிறேன். நான் இறந்தாலும் சரி’ என்று ஜெபித்தார்.*

அக்டோபர் 31, பக்கம் 19

5

# எனக்கு சத்தியத்தைக் காட்டும்

**நிகா**

*‘எனக்குச் சத்தியத்தைக் காண்பியும்’ என்று ஜெபிக்கத் தொடங்கினார்.*

நவம்பர் 7, பக்கம் 22

6

# வெற்றிடம் நிரம்பியது

**கோரன்**

*ஆர்வத்துடனும் உண்மையாகவும் வேதாகமத்தை வாசிக்கவும் ஜெபிக்கவும் தொடங்கினான்.*

**நவம்பர் 14, பக்கம் 25**

7

# வளருவதற்கான இடம்

**லியோன்**

அந்த எண்ணம் அவனை விட்டுப்
போகவில்லை. அது மேலும் வளர்ந்தது.

**நவம்பர் 21, பக்கம் 28**

8

# ஊழியக்களமான ஒரு பள்ளி

**அகதா**

“கவலைப்படாதீர்கள், நாங்கள்
ஜெபிக்கிறோம்” என்று சொன்னார்கள்.
ஜெபித்தார்கள். மழையும் நின்றது.

**நவம்பர் 28, பக்கம் 31**

9

# இருதயங்களைத் திறக்கிற வேதாகமம்

**மோனிகா**

மோனிகா அந்தக் கதைகளை அவர்களுக்குச்
சொல்கிறார்; வேதாகமத்தின்மீது
நம்பிக்கையை உருவாக்குகிறார்.

**டிசம்பர் 5, பக்கம் 34**

**ஷான்னா**

# 10

## புகலிடமாக மாறிய பள்ளி

அந்தப் பள்ளியின் குணாதிசயத்தை விவரிக்கிற பல செயல்களில் இதுவும் ஒன்று.

**டிசம்பர் 12, பக்கம் 37**

# 11

## கதவுகளைத் திறக்கும் இசை

**ஃபியோனா**

இசை அவர்களுக்கு ஓர் ஒழுங்கையும் நம்பிக்கையையும் தந்தது.

**டிசம்பர் 19, பக்கம் 40**

# 12

## இசையையும் தாண்டி

**கீரோன்**

ஆனால் கீரோனைப் பொறுத்த வரை, இசை என்பது வெறும் இசைக்குறிப்புகள் சார்ந்தது மட்டுமல்ல.

## இந்தக் காலாண்டுத் திட்டங்கள்

**இந்தப் பதிமூன்றாம் ஓய்வுநாள் காணிக்கை அல்லது காலாண்டு ஊழியத்திட்ட காணிக்கையானது டிரான்ஸ்-யூரோப்பியன் டிவிஷனில் பின்வரும் முக்கிய திட்டங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படும்:**

- ஃபின்லாந்தின் ஹெல்சின்கியில் திருச்சபையின் அமைப்பான ஒய்கோஸ் குடும்ப மிஷன் மையத்தை நிறுவுதல்
- போலந்தின் பாட்கோவா லெஸ்னாவில் போலந்தின் முதல் அட்வென்டிஸ்ட் தொடக்கப் பள்ளியான காம்பஸ் பள்ளியை விரிவுபடுத்துதல்
- குரோஷியாவின் சாகிரேப்பில் உள்ள செவந்த்-டே அட்வென்டிஸ்ட் திருச்சபையை மீண்டும் கட்டுதல்
- ஐக்கிய இராச்சியத்தின் இங்கிலாந்தில் உள்ள சமூகப் பள்ளி களில் 'ஸேப்ஸ்பேஸ்2பி உதவி மையங்களை ஏற்படுத்துதல்.

இந்த முக்கியமான திட்டங்களுக்காக தாராளமாக காணிக்கை வழங்கும் உங்கள் ஒவ்வொருவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**டிசம்பர் 26, பக்கம் 43**

# சேவைக்கே அர்ப்பணிப்பு

13

**யெரோன்**

*“தேவனைப் பிரதிபலிக்காத பாடல்களை நாங்கள் வாசிப்பதற்கு வழியே இல்லை” என்று யெரோன் கூறினார்.*

ஃபின்லாந்து



# ஹெல்சின்கியின் தெருக்களில் ஒரு குடும்பம்

*தேவனுடனும் தனது குடும்பத்தினருடனும் நேரத்தைச் செலவழித்தாள்*

ஹெல்சின்கியின் மையப்பகுதியில் அன்று பனிப்பெய்துகொண்டிருந்தது; ஜென்னி, அன்று ஆலயத்திற்குச் செல்லாமல், தன் நண்பர்களுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தாள்.

மூன்று மாதங்களுக்கு முன்புதான், விசுவாசமான ஒரு வாழ்க்கையை நோக்கிய தன் பயணத்தைத் தொடங்கியிருந்தாள். தன் அம்மாவை ஒரு மருத்துவரிடம் அழைத்துச் சென்றிருந்தபோது, அம்மா உள்ளே அமர்ந்திருந்த சமயத்தில், தெருக்களில் அலைந்து, தேவனிடம் அமைதியாக ஜெபம்செய்துகொண்டே, ஏதாவது சபை கண்ணில் படுகிறதா என்று பார்ததாள். ஒரு பரபரப்பான சதுக்கத்திற்கு அருகில், ஒரு குறிப்பிட்ட தெருவில் நடந்து செல்லுமாறு உள்ளுணர்வு அவளைத் தூண்டியது.

அந்த முடிவுதான் எல்லாவற்றையும் மாற்றியது.

அங்கே, அவள் ஹெல்சின்கியில் உள்ள செவந்த்-டே அட்வென்டிஸ்ட் சபையினுடைய, 'ஓய்கோஸ் ஹவுஸ்' என்கிற ஒரு அமைப்பைச் சேர்ந்த ஒரு சிறிய குழுவைச் சந்தித்தாள். அங்கிருந்த தன்னார்வலர்களில் ஒருவர் அவளிடம் வந்து, "உங்களுக்காக யாராவது எப்போதாவது கவிதை எழுதியிருக்கிறார்களா?" என்று எதிர்பாராத ஒரு கேள்வியைக் கேட்டார். அவள் "இல்லை" என்று சொன்னாள். ஏதேனும் மூன்று வார்த்தைகளைக் கூறுமாறு அவளிடம் அந்த நபர் கேட்டார். அவள் சொன்ன வார்த்தைகளில் ஒன்று 'சமாதானம்'.

இவ்வாறுபேசிக்கொண்டிருந்த

போது, தான் தேவனை நம்புவதாக ஜென்னி சொன்னாள், ஆனால் அந் தக் குழுவினர் கிறிஸ்தவர்கள் என் பதை அவள் அப்போது உணர்ந் திருக்கவில்லை. மக்களை ஆலயத் திற்கு அழைக்கிற ஊழியத்தை தாங் கள் செய்வதாக அவர்கள் சொன் னார்கள். அப்போது, லிண்டா என் கிற மற்றொரு தன்னார்வலர், ஓய் கோஸ்ஹவுஸ்பற்றிப்பகிர்ந்துகொண் டார். தொடர்பு எண்களைப் பரிமா றிக் கொண்டார்கள்; தொடர்ந்து வரு மாறு அவளை அழைத்தார்கள்.

ஆரம்பத்தில், ஜென்னி சற்று தயங்கினாள். ஆனால், அந்தத் தெரு வில் தன்னை வழிநடத்திய அதே தேவனை நம்பினாள். ‘‘நான் பயப் படவில்லை. அவரே என்னை வழி நடத்தினார் என்பதை உணர்ந்திருந் தேன்’’ என்று பின்னர் சொன்னாள்.

இரண்டு வாரங்களுக்குப் பின், அந்த ஓய்கோஸ் ஹவுஸிற்கு ஜென்னி மீண்டும் சென்றாள்.

‘‘நான் ஒரு ஆலயக் கட்டிடத் தை எதிர்பார்த்துதான் முதலில் தேடிச் சென்றேன். உள்ளே ஒரு குடும்பம் மட்டும் இரவு உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தால் என்ன செய்வது என்று யோசித்தேன். ஆனாலும், ‘‘ஆண்டவரே, நீர்தான் என்னை இங்கு வழிநடத்தினீர், தொடர்ந்து என்னை வழிநடத்தும் என்று பிரார்த் தனை செய்தேன்’’ என்று சொன் னாள்.

அங்கே அவளை அன்புடன் வரவேற்றார்கள். ஆராதனை இயல் பாகவே சிறு குழு உரையாடல்களாக மாறியது, அவர்கள் விரைவிலேயே நண்பர்களாயினர். ‘‘என் வீட்டில் இருப்பது போன்றே உடனடியாக எனக்குள் ஓர் உணர்வு உண்டானது. அதனால், அங்கு தொடர்ந்து செல் வதற்கு ஆரம்பித்தேன்’’ என்று கூறி னாள்.

ஜென்னியின் பெற்றோரில் அவளது அம்மா ஒரு மதத்தையும், அப்பா வேறொரு மதத்தையும் சேர்ந்தவர்; அதனால் கலவையான ஒரு மதப்பின்னணியில் வளர்ந்தாள். ஆனால், தவறாமல் ஆலயத்திற்குச் செல்கிற பழக்கம் இல்லாதிருந்தது. வாலிப வயது பெண்ணாக, அவள் மதம் சாராத உலகியல் வாழ்க்கை முறைபடியே வாழ்ந்தாள். மேலும், ஒரு வேதனையான காதல் உறவிலும் சிக்கினாள். அது அவளை உணர் வுப்பூர்வமாக முடக்கிப்போட்டது.

‘‘நான் மிகவும் முடங்கியிருந் தேன், மீளுவதற்கு ஏதாவது ஒரு வழி கிடைக்காதா என்று தேடினேன், தேவனைப்பற்றி நான் கேள்விப் பட்டிருந்ததால், அதுவே என்னு டைய கடைசி நம்பிக்கையாக இருந் தது’’ என்று சொன்னாள்.

மிகுந்த விரக்தியில் அவள், ‘‘நீர் உண்மையிலேயே இருந்தால், தயவுசெய்து எனக்கு உதவிசெய் யும்’’ என்று ஜெபித்தாள்.

தேவன் பதிலளித்தார்.

இயேசுவுடன் ஒரு தனிப்பட்ட உறவை ஜென்னி வளர்த்துக்கொள் ளத் தொடங்கியதும், அந்தப் பழைய உறவையும் தன்னுடைய பழைய வாழ்க்கை முறையையும் விட்டு வெளியேறுவதற்கான வலிமையைப் பெற்றாள். தன்னுடைய வாழ்க்கை யில் நடக்க சாத்தியமில்லை என்று நினைத்திருந்த ஒரு விஷயத்தை

ஜெபத்தின்மூலம் தேவன் அவளுக்குச் செய்தார்; அவளுடைய கோபத்தையும் கசப்புணர்வையும் நீக்கினார்.

‘‘என்னை ஏமாற்றியவர்மீது எனக்கிருந்த வெறுப்பு நீங்கியது. இயேசு எனது கோபத்தை நீக்கிவிட்டார் என்று அவரிடமும் கூறினேன்’’ என்று சொன்னாள். மன்னிப்புமூலமாக, தனது முன்னாள் காதலனுடன் ஜென்னியால் நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ள முடிந்தது; இதை தனது சொந்தப் பலத்தால் ஒருபோதும் செய்திருக்க முடியாது என்று அவள் கூறுகிறாள்.

தனது பழைய வாழ்க்கையிலிருந்து விலகிய பிறகு, ஜென்னி தன்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் வளரத் தொடங்கினாள்; தேவனுடனும் தனது குடும்பத்தினருடனும் நேரத்தைச் செலவழித்தாள், மேலும் புதிய நண்பர்கள் கிடைக்க வேண்டுமென ஜெபித்தாள். அந்த ஜெபத்திற்கு ஓய்கோஸ் ஹவுஸ் மூலம் பதில் கிடைத்தது.

‘‘ஓய்கோஸ் அமைப்பில் எனக்கு மிகவும் பிடித்த விஷயம் என்னவென்றால், அது ஒரு குடும்பத்தைப் போன்றது. யாராக இருந்தாலும் அவர்கள் இருக்கிற நிலையிலேயே வரவேற்கப்படுகிறார்கள். பல்வேறு பின்னணிகளைச் சேர்ந்த மக்கள் இங்கு இருக்கிறார்கள், இருந்தாலும் இது சிறப்பாகச் செயல்படுகிறது’’ என்று சொன்னாள்.

அந்த விசுவாசிகள்மூலமாக, டிமி என்பவரை ஜென்னி சந்தித்தாள், அவர் முதன்முதலாக ஓய்கோஸ் குழு உருவாக்கப்பட்டபோதே உறுப்பினராக இருந்தவர். அவர்களின் நட்பானது விசுவாசம், ஜெபம் மற்றும் ஒரு குறிக்கோளை அடிப்படையாகக் கொண்ட ஒரு நல்ல உறவாக வளர்ந்தது. ஒன்பது மாதங்கள் பழகிய பிறகு, ‘அரைஸ்’ சீடத்துவப் பயிற்சியின்போது அவர்கள் நிச்சயதார்த்தம் செய்துகொண்டு, 2025 ஜூலையில் திருமணம் செய்து கொண்டனர்.

கிழக்கு ஃபின்லாந்தில் நடைபெற்ற மூன்று மாத சீடத்துவ, நற்செய்திப்பணித்திட்டமான ‘அரைஸ் ஃபின்லாந்து’ என்கிற நிகழ்ச்சியிலும் ஜென்னி பங்கேற்றார். அங்கே, வேத ஆராய்ச்சியும், ஐக்கியமும், நற்செய்திப் பணிகளும் அவளது விசுவாசத்தை இன்னும் ஆழப்படுத்தின.

‘‘நான் கற்றுக்கொண்ட மிகமுக்கியமான விஷயம், தேவன் அன்பாகவே இருக்கிறார் என்பதுதான். அதை நீங்கள் புரிந்துகொள்ளும்போது, முழு வேதாகமும் உங்களுக்கு தெளிவாக விளங்கும்’’ என்று சொன்னாள்.

இன்று, எதிர்காலத்தில் தான் செய்யவேண்டிய சேவையைத் திட்டமிட்டு, அதற்கு தன்னைத் தயார்படுத்திக் கொள்ளுகிற வகையில், ஹெல்சின்கி பல்கலைக்கழகத்தில், பாலர்பள்ளி நடத்துவதற்கான கல்வியைப் படித்து வருகிறாள். அவளும் டிமியும் ஓய்கோஸ் ஹவுஸுக்கு அருகிலேயே வசிக்கிறார்கள். முதன்முதலில் அவள் சென்ற அந்த இடத்திலிருந்து இது சில நிமிட தூரத்தில் தான் அவர்கள் வசிககிற வீடு உள்ளது.



# ஒவ்வொரு அடியும் ஒரு போராட்டம்

*அவனது இதயத்தில் ஒரு வார்த்தை ஆழமாகப் பதிந்தது: அது 'ஜெபி' என்பதுதான்.*

ஓர் ஓய்வுநாள் காலையில், ஹெல்சின்கியில் உள்ள ஓய்கோஸ் ஹவுஸுக்கு முதன்முதலில் ஜோ வந்தபோது, உள்ளே செல்வதற்கு அவனுக்கு மிகவும் தயக்கமாக இருந்தது. திரும்பி சென்றுவிடலாம் என்றுகூட யோசித்தான். சமீபத்தில் தான் தேவனிடம் செல்லவேண்டும் என்கிற ஆசை அவனுக்குள் ஏற்பட்டிருந்தது. அதனால்தான், வீட்டை விட்டுக் கிளம்பி, ரயில் நிலையத்திற்கு நடந்து சென்று ரயிலில் ஏறி, இதற்குமுன் தான் அறிந்திராத ஒரு வீட்டிற்குச் செல்கிறோம் என்கிற பதற்றம் அவனுக்குள் மிகவும் அதிகரித்தது.

''ஒவ்வொரு அடியும் ஒரு போராட்டமாக இருந்தது, ஆவிக்குரிய போராட்டம் ஒன்று இருப்பதெல்லாம் அப்போது எனக்குத் தெரியாது. ஆனால் ஏதோ ஒன்று அங்கு நான் செல்வதைத் தடுத்துக் கொண்டிருந்தது மட்டும் புரிந்தது'' என்று சொன்னான்.

நிலையத்திலிருந்து இறங்கி, ஐந்து நிமிடத்தில் அந்த வீட்டிற்கு நடந்து சென்றுவிடலாம். மாறாக, பதினைந்து நிமிடங்கள் ஆனது, அங்கு செல்வதற்குள் மூன்று முறை ஜெபித்துவிட்டான்.

கதவுக்கு வெளியே நின்றான்; போதும், ஜோவுக்கு தயக்கமாக இருந்தது. 'ஒருவேளை இது தவறான இடமாக இருந்தால் என்ன செய்வது? அவர்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் என்ன செய்வது?' என்று யோசித்தான். அழைப்புமணியை அழுத்தினான், ஐந்து வினாடிகளுக்குள் யாரும் கதவைத் திறக்காவிட்டால், வீட்டிற்கு

ஓடிவிடுவேன்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

கதவை உடனடியாகத் திறந்தார்கள்.

அன்பாக சிரிப்புடன் தன்னை வரவேற்றதுமே, காலைமுதலே தன்னிடம் காணப்பட்ட பயம் மறைந்தது. 'அது ஒரு தடையைத் தாண்டிச் செல்வதுபோல் இருந்தது, நான் உள்ளுக்குள் கால் வைத்த கணமே எனது பதற்றம் மறைந்துவிட்டது' என்று கூறினான்.

முதன்முறையாக, வித்தியாசமான ஒரு ஆலயத்தைப் பார்த்த அனுபவம் உண்டானது.

ஜோவின் அந்தப் பயணம், அவன் ஃபின்லாந்திற்கு வருவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே தொடங்கியிருந்தது. தாய்லாந்தில் ஒரு ஃபின்லாந்து தந்தைக்கும் தாய்லாந்து தாய்க்கும் பிறந்த ஜோ, தனது குழந்தைப்பருவத்தின் பெரும்பகுதியை அட்வெண்டிஸ்ட் பள்ளிகளில் படிப்பில் கழித்தான். வேதாகம கதைகளைக் கற்றுக்கொண்டான், பாடல்களைப் பாடப் பழகினான், சாப்பிடுவதற்குமுன் ஜெபித்துவிடுவான்; ஆனாலும் விசுவாசவாழ்க்கையிலிருந்து தான் தள்ளியே இருப்பதுபோல உணர்ந்தான்.

"தேவன் இருக்கிறார் என்று நம்பினேன், ஆனால் அவரை நான் தனிப்பட்ட முறையில் அறிந்திருக்கவில்லை' என்று கூறினான்.

ஜோவிற்கு 13 வயதாக இருந்தபோது, அவனது தாய் காலமானார். அவர் இறப்பதற்குச் சற்று முன்னர்தான் கிறிஸ்தவ விசுவாசத்தைக் கண்டுகொண்டார் என்றாலும், அந்த இழப்பு ஜோவை ஆழமான குழப்பத்திலும் கசப்புணர்விலும் ஆழ்த்தியது. ஒரு காலத்தில் அவனுக்கு புகலிடமாக இருந்த ஒரு இளைஞர் குழுவும் அதன்பின் விரைவில் கலைந்து போனது, மேலும் தேவனைப்பற்றிய அவனது கேள்விகளுக்கும் பதில்கள் கிடைக்கவில்லை.

"அன்பான ஒரு தேவன் ஏன் என் தாயையும், அதன் பிறகு அந்த இளைஞர் குழுவையும் என்னிடமிருந்து பறித்தார் என்று எனக்குப் புரியவில்லை, அதனால், அவரிடமிருந்து விலகிச் சென்றேன்" என்று ஜோ கூறினான்.

பல வருடங்களாக, சொந்தப் பந்தங்கள் வேண்டுமென ஆசைப்பட்டு, கேளிக்கை விருந்துகளிலும், மதுபான விருந்துகளிலும், வேறே ஆவிமார்க்க விஷயங்களிலும் கலந்துகொண்டான். ஆனால் எதுவுமே நிலைக்கவில்லை. தன்னுடைய வலியை மறக்கடிக்கச்செய்ததுபோல் தோன்றிய விஷயங்கள், காலப்போக்கில் அந்த வலியை இன்னும் அதிகமாக்கின.

இருபதுகளின் பிற்பகுதியில், ஜோ முற்றிலும் வெறுமையையும் சோர்வையும் உணர்ந்தான். மனச்சோர்வும் பதற்றமும் அவனைப் பெரிதும் வாட்டின; ஒரு வேதனையான காதல் முறிவும் அவனது விரக்தியை மேலும் தீவிரப்படுத்தியது.

"ஓர் இரவில், இந்த உலகம் எனக்குத் தருவதற்கு இனி எதுவுமே இல்லை என்று உணர்ந்தேன்" என்று கூறினான்.

தனது வாழ்க்கையில் மிகமோசமான அடிமட்ட நிலையை எட்டிய

போது, அவனது இதயத்தில் ஒரு வார்த்தை ஆழமாகப் பதிந்தது: அது 'ஜெபி' என்பதுதான்.

"யாரிடம் ஜெபிக்கவேண்டும் என்பது எனக்குத் தெளிவாகத் தெரிந்திருந்தது; நான் சிறுவனாக இருந்த போது அறிந்துகொண்ட அதே தேவனிடம்தான் ஜெபிக்கவேண்டும் என்பதை அறிந்து கொண்டேன்" என்று ஜோ கூறினான்.

அன்று இரவு, தனது வேதனையைப் போக்கவும், தனக்கு நல்வாழ்வைத் தரவும் தேவனிடம் மிகவும் உண்மையாகவும் விரக்தியோடும் ஜெபம் செய்தான். பல மாதங்களாகத் தூக்கமில்லாமல் தவித்திருந்ததால் ஏற்பட்ட சோர்வினால், அப்படியே தூங்கிப்போனான்.

அவன் விழித்தபோது, ஏதோ ஒன்று மாறியிருந்தது.

"மனச்சோர்வுநீங்கியிருந்தது, அது என்னால் நடந்தது அல்ல. அது கண்டிப்பாக தேவனால்தான் நடந்திருக்கவேண்டும்" என்று சொன்னான்.

சில நாட்களுக்குப் பிறகு, ஒரு குளிர்காலத்தின் கடுமையான இருட்டில் ஜோ மிதிவண்டியில் வேலைக்குச் சென்று கொண்டிருந்தபோது, அவனது இதயத்தில் மகிழ்ச்சி பொங்குவதை உணர்ந்தான். "சூரியன் எனக்காக மட்டுமே பிரகாசிப்பதுபோலத் தோன்றியது" என்று கூறினான். நன்றியுணர்வு நிறைந்த இதயத்துடன், தனது வாழ்க்கையைத் தேவனுக்கு முழுமையாக அர்ப்பணித்தான்.

அதன்பின் ஒரு சில நாட்களிலேயே, தனக்குக் கொடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று ஓய்கோஸ் ஹவுஸுக்கு ஜோ சென்றான்.

"ஆலயத்தில் இதுபோன்ற ஒன்றை நான் இதற்கு முன்பு அனுபவித்ததே இல்லை, நான் சொல்வதை அங்கிருந்தவர்கள் கவனித்துக் கேட்டார்கள். அவர்கள் எனது அனுபவத்தை தெரிந்துகொள்ள விரும்பினார்கள். அங்கு எந்தவித மானவிமர்சனமும்இருக்கவில்லை, மாறாக ஒரு சொந்த பந்த உணர்வு மட்டுமே இருந்தது" என்று கூறினான்.

அந்த முதல் ஓய்வுநாளில் ஜோ நீண்ட நேரம் அங்கேயே இருந்தான், தன்மீது உண்மையிலேயே அக்கறை காட்டியவர்களிடம் தன்னுடைய அனுபவ சாட்சியை மீண்டும் மீண்டும் பகிர்ந்துகொண்டான். அன்றிலிருந்து, ஒரு ஆவிக்குரிய குடும்பம் தனக்குக் கிடைத்துவிட்டதாக உணர்ந்துகொண்டான்.

"என்னை மிகவும் கவர்ந்த விஷயம் என்னவென்றால், இயேசுவின் போதனைகளைப்பற்றிப் பேசுவதோடுமட்டும் அவர்கள் நிறுத்திக் கொள்வதில்லை, அதை அப்படியே வாழ்ந்து காட்டவும் அங்கிருக்கிறவர்கள் முயற்சிசெய்கிறார்கள்" என்று ஜோ கூறினான்.

தன்மீது நம்பிக்கை வைத்த அந்த விசுவாசிகளின் ஊக்கத்தால், ஒரு புதிய அழைப்பை ஜோ உணரத் தொடங்கினான். இன்று, இறையியல் படித்து வருகிறான்; போதகர் பணிக்கு தன்னை ஆயத்தப்படுத்துகிறான். ஓய்கோஸ் ஹவுஸில் சேவை செய்யவும், புதிதாக சபைக்கிளைகளைத் தொடங்கவும் திட்டமுள்ளது.

## ஃபின்லாந்து



# என் வாழ்க்கையை மாற்றும்

*அந்த அனுபவம் அவனது ஊழியப்பணியின் தொடக்கமாக அமைந்தது.*

'நீர் உண்மையிலேயே இருந்தால், என் வாழ்க்கையை மாற்றும்' என்று அந்த பதின்ம வயது வாலிபன் ஜெபித்தான். அவன் சில பழக்கங்களிலிருந்து விடுபட முடியாமல் தவித்து, மனச்சோர்வடைந்த நிலையில் இருந்தான்.

ஃபின்லாந்தில் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்ந்தான் மிகேல். அவர்கள் அவனது அப்பா வழியில் நான்காவது தலைமுறை செவந்த்-டேஅட்வென்டிஸ்ட்குடும்பத்தினர். மிகேலின் தந்தைக்கும் தாய்க்கும் திருமணமாகி சில காலத்திற்குப் பிறகு, அவனது தாய் ஒரு சுவிசேஷக் கூட்டத்தின்மூலம் இந்த அட்வென்டிஸ்ட் சத்தியத்தைப்பற்றி அறிந்தார். அதன்பின் அவர் கர்ப்பமானதும், 'இந்தக் குழந்தையை உமது பணிக்காக நான் அர்ப்பணிக்கிறேன்உ என்று அமைதியாக ஒரு பொருத்தனை பண்ணினார்.

மிகேல் அந்த அர்ப்பணிப்பை முழுமையாகப் புரிந்து கொள்ளாவிட்டாலும், சிறுவனாக இருந்தபோதே, அதை ஆழமாக உணர்ந்திருந்தான். அவனுக்கு மூன்று வயதாக இருந்தபோது, தன் வீட்டு வரவேற்பறையில் ஒரு போதகர் போல நடித்து, 'வீட்டு சபை' ஆராதனைகளை நடத்தியிருக்கிறான். தனது 11 வது வயதில் ஞானஸ்நானம் பெற்றான். தேவனுடைய வழிநடத்துதலை தன் வாழ்வில் உணர்ந்தான். ஆனால், சில காலத்திற்குப் பிறகு, அவனுடைய குடும்பத்தினர் ஃபின்லாந்தின் ஒரு கிராமப்புற பகுதிக்குக் குடிபெயர்ந்தனர். அங்கிருந்த அட்வென்டிஸ்ட் திருச்சபை மிகவும் சிறியது. இத

னால், ஒரு விசுவாசியாகவும், ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவ ராகவும் தனக்கு யாருமே இல்லா ததுபோல மிகேல் உணர்ந்தான்.

தனக்கும் சொந்தப் பந்தங்கள் வேண்டும் என்கிற ஏக்கத்தில், தனது ஆரம்பக்கால பதின் பருவத் திலேயே புகைபிடிக்கவும், மது அருந்தவும், கேளிக்கை விருந்து களுக்குச்செல்லவும் ஆரம்பித்தான். வார இறுதி நாட்களை பெரும் பாலும் குடியும் கும்மாளமுமாகக் கழித்தான்; சில ஓய்வுநாட்களில் மதுவால் உண்டான தலைவலி யோடு திருச்சபையின் பின் வரிசை யில் அமர்ந்திருப்பான். தேவன் மீதான விசுவாசத்தை அவன் ஒரு போதும் கைவிடவில்லை, ஆனா லும் விசுவாசத்திற்கும் உலக ஆசை களின் ஈர்ப்பிற்கும் இடையே சிக்கி தவித்துக் கொண்டிருந்தான்.

அட்வென்டிஸ்ட் கோடைகால முகாம்கள் அவனது வாழ்க்கைக்கு ஒரு புதிய நம்பிக்கையைத் தந்தன. ஒவ்வொரு ஆண்டும், மிகேல் தேவனை நோக்கி இழுக்கப்பட் டான். ஆனால், மீண்டும் பள்ளிக் குத் திரும்பியபிறகு, தனது பழக்கங் களை மாற்றுவதற்கு அவனுடைய சுய கட்டுப்பாடு மட்டும் போதுமா னதாக இருக்கவில்லை. 15 வயதை எட்டியபோது, அவனுடைய போராட்டம் மிக மோசமான நிலை யை அடைந்தது. “நான் மிகவும் வருத்தப்படக்கூடிய சில முடிவு களை எடுத்தேன், அது ஒரு ஆவிக் குரிய போர்போல எனக்குத் தோன் றியது” என்று சொன்னான்.

ஒருமுகாம்கூட்டத்தின்போது, அங்கு வந்திருந்த ஒரு சிறப்புப் பேச்சாளர் தனது வாழ்க்கை மாறி னதுபற்றிய சாட்சியைப் பகிர்ந்து கொண்டார். கடைசி வரிசையில் அமர்ந்து கேட்டுக்கொண்டிருந்த மிகேல், “எனக்கு 25 வயதாகும் போது, என் வாழ்க்கையைச் சரி செய்துவிடுவேன்’ என்று தனக்குள் நினைத்துக் கொண்டான். குழப்பங் களுக்கு மத்தியிலும், தனக்கு ஓர் அழைப்பு கொடுக்கப்படுவதை உள் ளுக்குள் உணர்ந்தான். அது தன் னால் முழுமையாக விளக்கமுடி யாத, ஆனால், தவிர்க்க முடியாத ஓர் அழைப்பாக இருந்தது.

சுயக்கட்டுப்பாட்டின்மூலம் அந்தத் திருப்புமுனை வரவில்லை, மாறாக தேவனிடம் தன்னை முழு மையாக ஒப்படைத்ததன்மூலமே வந்தது.

ஒரு வார இறுதியில், ஒரு கேளிக்கை விருந்தில் கலந்து கொண்டு, நள்ளிரவு நேரத்தில் ஒரு ரயில் நிலையத்தில், அங்கிருந்த கண்ணாடியில் தன் பிம்பம் பிரதி பலிக்கப்பட்டதைப் பார்த்து, ‘நான் யாராக மாறிக்கொண்டிருக்கி றேன்?’ என்று தனக்குள்ளே கேட் டுக்கொண்டான். விடுதி அறைக் குத் திரும்பிய பிறகு, ‘தேவனே, எனக்கு இந்த வாழ்க்கை முறை பிடித்திருக்கிறது. இதை மாற்றிக் கொள்ளக்கூட எனக்கு விருப்ப மில்லை. ஆனால், நீர் விரும்பினால், என் வாழ்க்கையை மாற்ற உங்க ளுக்கு அனுமதி தரு கிறேன்’ என்று மனதின் ஆழத்திலிருந்து ஜெபித் தான்.

அதற்கு சில நாட்களுக்கு

பிறகு, 'நீர் உண்மையிலேயே இருந்தால், என் வாழ்க்கையை மாற்றும்' என்று மீண்டும் ஒருமுறை ஜெபித்தான். அப்படி ஜெபித்ததும், புத்துணர்வூட்டும் உணர்ச்சிப் பெருக்கை தேவன் கொடுத்துவிடவில்லை; மாறாக, அமைதியாக அவனுக்குள் ஒரு மாற்றத்தை உருவாக்க ஆரம்பித்தார். மிகேலின் விருப்பங்கள் மாற ஆரம்பித்தன. தனது கெட்ட பழக்கங்களை அகற்றினான். ஆவிக்குரிய வாழ்வில் தீவிரமாக இருந்த நண்பர்களுடன் நேரம் செலவிட்டான். ஒரு நாள் மாலையில், அவர்களுடன் சேர்ந்து ஜெபித்த பிறகு, அவனுக்குள் உணர்ச்சி அலைகள் எதுவும் எழவில்லை, ஆனாலும் எல்லாமே மாறிப்போயிருந்தது. 'நான் எதையும் உணரவில்லை, ஆனால், அதன்பிறகு நான் பழையபடி இருக்கவில்லை' என்று சொன்னான்.

பிறகு சீக்கிரமே, தேவன் அவனை எதிர்பாராத வழிகளில் பக்குவப்படுத்தத் தொடங்கினார். ஓர் ஓய்வுநாள் மதிய வேளையில், மிகேல் சலிப்புடன் ஒரு வணிக வளாகத்தில் சுற்றிக்கொண்டிருந்தபோது, முன்பின் தெரியாதவர்களிடம் தேவனைப்பற்றிப் பேசவேண்டும் என்கிற எண்ணம் அவனுக்குள் தோன்றியது. தனக்கு அதற்குத் தகுதியில்லை என்று நினைத்தாலும், அதைச் செய்யத் தீர்மானித்தான். அவன் பேச ஆரம்பித்தபோது, ஒரு காலத்தில் தூரமாகத் தெரிந்த விசுவாசம் திடீரென்று உண்மையானதாக மாறியது. 'நான் பேசப் பேச தேவனே எனக்குக் கற்றுக்கொடுப்பதுபோல் இருந்தது' என்று கூறினான்.

அந்த அனுபவம் அவனது ஊழியப்பணியின் தொடக்கமாக அமைந்தது.

உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்குப் பிறகு, ஆஸ்திரேலியாவில் ஒரு மிஷனரி பயிற்சித் திட்டத்தில் சேர்ந்தான். அங்கே, அவனுக்குள் ஒரு திட்டம் உருவானது: தனது சொந்த நாடான ஃபின்லாந்திற்குச் சென்று ஒரு புதிய திருச்சபையை நிறுவ விரும்பினான். 2019 ஆம் வருடத்தில், அவர் திருச்சபை தலைவர்களைத் தொடர்பு கொண்டு, ஹெல்சின்கியில் ஒரு புதிய ஊழியத்தைத் திட்டமிடுகிற பணிகளில் இணைந்தான்.

பிறகு 2020 ஆம் ஆண்டு வந்தது.

கொரோனா பெருந்தொற்று அவனது திட்டங்களை முடக்கியது. வெளிநாட்டிலிருந்த பெண் தோழியையும் தொடர்புகொள்ள முடியவில்லை. பணவிரயமானது; அது அவனை பெரும் மனச்சோர்வில் ஆழ்த்தியது. தூக்கமில்லாமலும் தனிமையிலும் தவித்த நிலையில், தேவன் தனக்கு ஏன் இவ்வளவு பெரிய நம்பிக்கையைக் கொடுத்துவிட்டு, பிறகு அதை அப்படியே பறித்துக் கொண்டார் என்று கேள்வி எழுப்பினான். ஆனாலும், அந்த இக்கட்டான காலக்கட்டத்திலும் தேவன் அமைதியாக தம் வேலையைச் செய்து கொண்டிருந்தார்.

ஆகஸ்ட் 2020 இல், 'ஒய்கோஸ் ஹவுஸ்' ஊழியம் அங்கு துவங்கப் பட்டது.

## குரோஷியா



# நான் ஒருபோதும் தனிமையில் இல்லை

*'தேவனே, நான் ஆயத்தமாக இருக்கிறேன். நான் இறந்தாலும் சரி' என்று ஜெபித்தார்.*

மார்ச் 22, 2020 அன்று அதி காலை ஐந்து மணி இருக்கும், திடுக் கிட்டு விழித்தார் போதகர் டேரியோ. பொதுவாக அவர் அந்த நேரத்தில் எழும்புவதில்லை, ஆனால் தூக்கம் சுத்தமாக மறைந்தது, பாடல் பாட வேண்டுமென்று பலமான தூண்டு தல் ஏற்பட்டது.

கட்டிலிலிருந்து சத்தம் போடா மல் மெதுவாக எழுந்தவர், தனது கிட்டாரை எடுத்து, 'நான் ஒருபோ தும் தனிமையில் இல்லை, நான் ஒரு போதும் தனிமையில் இல்லை' என்று பாடத் தொடங்கினார்.

அடுத்த முப்பது நிமிடங்க ளுக்கு அவர் அதே வார்த்தைகளைத் திரும்பத் திரும்பப் பாடிக் கொண்டி ருந்தார். அதற்கான காரணம் அவ ருக்குத் தெரிய வில்லை.

பின்னர் தனது படுக்கைக்கு அருகில் முழங்காலிட்டு, கோவிட் -19 பெருந்தொற்றுக் காலத்தில் தான் நடத்தி வந்த இணைய வழி சுவிசே ஷக் கூட்டங்களுக்காக ஜெபிக்கத் தொடங்கினார். ஒவ்வொரு நாளும் அவர் விசுவாசத்தோடு நம்பிக்கை யூட்டும் செய்திகளை நேரலை செய்து வந்தார், ஆனாலும் அதைப் பார்ப்ப வர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது. எப்படி யாவது தேவன் இந்தக் கூட்டங்க ளைப் பயன்படுத்தி மக்களின் இத யங்களைத் தொடவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்.

சற்று நேரத்திற்குப் பிறகு, மீண் டும் படுத்தார். மல்லாந்து படுத்துக் கொண்டு, தனது கைகளை வானத்தை நோக்கி உயர்த்தி, தொடர்ந்து ஜெபித் தார். இந்த முறை தனது திருச்சபை உறுப்பினர்களுக்காக ஜெபித்தார்.

தேவன் அவர்களை வலுப்படுத்தவும், ஊக்கப்படுத்தவும், தமக்கு நெருக்கமாக வைத்திருக்கவும் வேண்டிக்கொண்டார்.

குரோஷியாவின் தலைநகரில் உள்ள புகழ்பெற்ற சாகிரேப் 1 செவந்த் -டே அட்வென்டிஸ்ட் திருச்சபையில் போதகர் டேரியோ பணியாற்றினார். இது அந்த நாட்டின் முதலாவது அட்வென்டிஸ்ட் சபையாகும். 1935 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த ஆலயம், அந்நாட்டின் தலைநகரில் அட்வென்டிஸ்ட் நிறுவனத்திற்குச் சொந்தமான முதல் ஆராதனை இடமாகும். சட்டரீதியாகவும் சமுக ரீதியாகவும் பல சவால்கள் எழுந்த ஒரு காலக்கட்டத்தில், அர்ப்பணிப்பு க்க உறுப்பினர்கள் ஒன்றிணைந்து இதனை உருவாக்கினர். இந்த வளாகத்தில் அழகான இரண்டு அடுக்கு வழிபாட்டுக் கூடம் ஒன்றும், ஓய்வுநாள் பள்ளி அறைகளும், அலுவலகங்களும், ஒரு நூலகமும், பதிப்பகமும், வழிபாட்டுக் கூடத்திற்கு நேராக மேலே குடியிருப்புகளும் அமைந்துள்ளன.

போதகர் டேரியோ அந்தக் குடியிருப்புகளில் ஒன்றில்தான் வசித்து வந்தார்.

காலை 6:34 மணிக்கு, அவர் அங்கு படுத்துக்கொண்டு ஜெபித்துக் கொண்டிருந்தபோது, ஒட்டு மொத்த கட்டிடமும் பயங்கரமாகக் குலுங்கத் தொடங்கியது.

அலமாரிகள் சரிந்து விழுந்தன. சுவர்கள் விரிசலடைந்தன. அவருக்குக் கீழே இருந்த தரை ஆடியது.

ஆனால், மன அமைதியுடன் இருந்தார். தேவன் தன்னுடன் இருப்பதை அறிந்திருந்தார். ‘நான் ஒரு போதும் தனிமையில் இல்லை’ என்று சற்று முன்பு அவர் பாடிய பாடல்கள் அவரது மனதில் நிறைந்தன:

‘தேவனே, நான் ஆயத்தமாக இருக்கிறேன். நான் இறந்தாலும் சரி’ என்று ஜெபித்தார்.

குலுக்கல் நின்றதும், அருகில் இருந்த கட்டிடங்களில் இருந்து அலறல் சத்தங்கள் கேட்டன. அந்த நில நடுக்கம் சாகிரேப் நகரை மிகக் கொடூரமாகத் தாக்கியது. போதகர் டேரியோ வேகமாக ஆடைகளை அணிந்துகொண்டு வெளியே ஓடினார். அண்டை வீட்டாரை ஒன்றிணைத்து, பயந்துபோயிருந்த குடியிருப்பாளர்களை அமைதிப்படுத்த உதவினார். புகழ்பெற்ற சாகிரேப் 1 வழிபாட்டுக் கூடம் உட்பட, அந்த நகரத்தில் இருந்த பல கட்டிடங்கள் இனி சரிசெய்யவே முடியாத அளவிற்குச் சேதமடைந்தன.

காலை 10:00 மணி அளவில், அவருடைய தொலைபேசி அடிக்கத் தொடங்கியது. கவலையடைந்த குடும்ப உறுப்பினர்கள் அவரை அந்த நகரத்தை விட்டு வெளியேறுமாறு வற்புறுத்தினர். “நீ வீட்டுக்கு வந்துவிடு” என்று அவரது அம்மா கூறினார்.

“அவர்கள் சாகிரேப் நகரை மூடிவிடுவார்கள்” என்றார்.

தற்காலிகமாக வெளியேறுவது புத்திசாலித்தனமாக இருக்கும் என்று நினைத்து, போதகர் டேரியோ ஒரு பெட்டியில் தனது பொருட்களை எடுக்க ஆரம்பித் தார்.

அப்போது, ‘நீ எங்கே போகி

றாய்?' என்று அவருக்குள் தெளிவான ஓர் உணர்வு தோன்றியது.

"வீட்டிற்கு" என்று சத்தமாகப் பதிலளித்தார்.

ஆனால் உள்மனதில் ஏற்பட்ட அந்தத் தூண்டுதல், 'இல்லை. போக வேண்டாம். உன்னுடைய அலுவலகத்திற்குப் போ' என்று சொன்னது.

அங்கு சென்றால் நிலைமை எப்படி இருக்கும் என்று தெரியாவிட்டாலும், அதற்குக் கீழ்ப்படிந்தார்.

ஆச்சரியப்படுகிற வகையில், அவருடைய அலுவலகம் எந்தச் சேதமும் இல்லாமல் அப்படியே இருந்தது. சுவிசேஷக்கூட்டங்களை நேரலை செய்யப் பயன்படுத்தப்பட்ட அந்தச் சிறிய ஸ்டுடியோகூடச் சேதமடையவில்லை.

விரைவில் அந்தக் கான்ஃபரன்ஸின் தலைவர் அங்கு வந்தார். நிலநடுக்கத்தின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, இணையவழிக் கூட்டங்களை தற்காலிகமாக நிறுத்தவேண்டியிருக்கும் என்று நினைத்தார்.

ஆனால், தொழில்நுட்ப வல்லுநர்கள் உபகரணங்களைச் சோதித்துப் பார்த்தனர்.

"இன்றைக்கும் நம்மால் ஒளிபரப்ப முடியும்" என்று கூறினர்.

"நேரலையில் பேசுவதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?" என்று போதகர் டேரியோவிடம் தலைவர் கேட்டார்.

"ஆம், நான் கண்டிப்பாகப் பேசவேண்டும்" என்று அவர் எவ்விததயக்கமும்இன்றி பதிலளித்தார்.

அன்று மாலையில் நிகழ்ச்சி தொடங்கியதும், ஆச்சரியமான ஒன்று நடந்தது. அதைப் பார்ப்பவர்களின் எண்ணிக்கை திடீரென பெருமளவில் உயர்ந்தது. நிலநடுக்கத்தால் நிலைகுலைந்து, பயந்துபோய், நம்பிக்கையைத் தேடிக்கொண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் அந்த நேரலையைப் பார்த்தனர்.

"நாங்கள் அனைவரும் அனுபவித்த அந்தப் பயங்கரமான சம்பவத்திற்குப் பிறகு, அத்தனை மக்கள் இதைப் பார்த்து ஊக்கம் பெற்றது மிகவும் முக்கியமான ஓர் அனுபவமாக இருந்தது. அந்த நேரலை நிகழ்ச்சியை தொடர்ந்து நடத்துவது அவசியமாக இருந்தது. அந்தத் துயரச்சம்பவத்தைப் பயன்படுத்தி ஒரு புதிய தொடக்கத்தை தேவன் உருவாக்கினார்" என்று போதகர் டேரியோ பின்னர் கூறினார்.

இணையவழி ஊழியமானது அந்தக் கணத்திலிருந்து, வியப்பூட்டுகிற வகையில் விரிவடைந்தது. போதகர் டேரியோவும் குரோஷியாவில் உள்ள பல அட்வென்டிஸ்ட் போதகர்களும் யூடியூப் சேனல்களைத் தொடங்கினர், அவை இன்றும் தொடர்ந்து இயங்கி வருகின்றன; இதன்மூலம் ஆயிரக்கணக்கான மக்களை அவர்கள் சென்றடைந்துள்ளனர். மேலும், நூற்றுக்கணக்கான மக்கள் வேத ஆராய்ச்சியில் ஆர்வம் காட்ட இது வழிவகுத்துள்ளது.

வளர்ந்து வரும் இந்த டிஜிட்டல் ஊழியத்தை அங்கீகரிக்கும் விதமாக, போதகர் டேரியோ இப்போது டிரான்ஸ்-ஐரோப்பிய டிவிஷனில் உள்ள அட்ரியாடிக் யூனியன் கான்ஃபரன்ஸின் ஊடக இலாகா இயக்குநராகப் பணியாற்றி வருகிறார்.

குரோஷியா



# எனக்கு சத்தியத்தைக் காட்டும்

*‘எனக்குச் சத்தியத்தைக் காண்பியும்’ என்று ஜெபிக்கத் தொடங்கினார்.*

வாரநாட்களின் பிற்பகல் வேளைகளில், சாகிரேப் நகரில் அமைந்துள்ள சபை நூலகம் ஒன்றில் கூடுகிற மாணவர்கள் சந்தோஷமாக, கவனச்சிதறலில்லாமல் கற்றுக்கொள்கிறார்கள். அந்த இடம் பிரிலாஸ் பள்ளி என்று அழைக்கப்படுகிறது. அங்கிருந்த ஒரு சிறுபிள்ளைக்கு வீட்டுப் பாடங்களைச் செய்ய நிகா உதவுகிறார். பிறகு, “நாம் ஜெபிக்கலாமா?” என்று அன்பாகக் கேட்கிறார்.

ஒவ்வொரு வாரமும் பன்னிரண்டு மாணவர்கள் வரை அங்கு கூடுகிறார்கள், நிகா அவர்களுக்கு ஓர் ஆசிரியையாக மட்டும் இருக்கவில்லை. மாணவர்கள் சொல்வதை பொறுமையாகக் கேட்கிறார், ஊக்கப்படுத்துகிறார், அந்தச் சிறுவர்களின் இருதயங்களை தேவனை நோக்கி வழிநடத்துகிறார்.

ஒருநாள், ஒரு மாணவரின் தாயார் எதிர்பாராத விதமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கிருந்த சிறுவர்கள் மிகவும் கவலையடைந்தனர். “அவருக்காக நாம் ஜெபிப்போம்” என்று நிகா கூறினார். அவர்களும் ஜெபித்தார்கள். அதன் பிறகு, அந்தத் தாய் விரைவில் குணமடைந்தார்.

அங்குள்ள அன்பான சூழலைக் கண்டு, மகிழ்ச்சியடைந்த இன்னொரு பிள்ளை, “நான் வளர்ந்த பிறகு, இங்கே வேலை செய்ய விரும்புகிறேன்!” என்று சொன்னது.

இதுபோன்ற தருணங்கள் நிகாவை அதிகம் ஊக்குவிக்கின்றன. “நான் மிகவும் மனநிறைவோடும், இயேசுவுக்கு மிக நெருக்கமாகவும் உணர்கிறேன். பரிசுத்த ஆவி

யானவர் என்னைவழிநடத்துகிறார் என்பதை நான் அறிவேன்'' என்று கூறுகிறார்.

ஆனால் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, அவர் வாழ்ந்த வாழ்க்கையோ முற்றிலும் விதியாசமாக இருந்தது.

குரோஷியாவிலுள்ள பெரும்பாலான மக்களைப்போல, அந்த நாட்டின் பாரம்பரிய மதத்திலேயே நிகா வளர்ந்தார். ஆனால், தன்னுடைய வாலிப பருபவத்தில், அதைவிட மேலான ஒன்றைத் தேட ஆரம்பித்தார். அவரது ஆன்மீக ஆர்வம் அவரை நவீனயுக போத னைகளுக்குள் வழிநடத்தியது. மறு பிறவி பற்றிய கருத்துக்களை ஆராய்வதற்காகவும், விரிவான சடங்குகளில் பங்கேற்பதற்காகவும் இந்தியாவுக்குக்கூட அவர் பயணம் செய்தார்.

''ஆனால் அதனாலும் பயனில்லை, எதுவும் மாறவில்லை. நான் பிரார்த்தனை செய்தேன், ஆனால் எல்லாமே அப்படியேதான் இருந்தது'' என்று அந்த அனுபவத்தைப் பற்றி நினைவுகூருகிறார்.

அங்கு காணப்பட்ட முரண்பாடுகள்தாம் அவருக்கு மிகப்பெரிய தடங்கலாக இருந்தன. ''அவர்கள் நல்ல விஷயங்களைப்பற்றிப் பேசினார்கள், ஆனால் அவர்கள் அதன்படி வாழவில்லை'' என்று அவர் கூறுகிறார்.

ஏமாற்றமும் ஆவிக்குரியரீதியில் கலக்கமும் அடைந்த நிகா, தனிமையுணர்வோடும், வாழ்க்கையில் அர்த்தமே இல்லை என்கிற நினைவோடும் குரோஷியாவிற்குத் திரும்பினார். பிறகு ஒரு நாள், வயதான ஒரு பெண்மணியைச் சந்தித்தார். அவர் நிகாவை ஆலயத்திற்கு வரும்படி அழைத்தார்.

அங்கே ஒரு வேதாகமத்தைக் கொடுத்தார்கள்.

அதை வாசிக்கத் தொடங்கிய போது, ஓய்வுநாள் சம்பந்தப்பட்ட விஷயம் அவருடைய கவனத்தை ஈர்த்தன. அது வேதவசனங்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்ததைக் கவனித்தார்.

''நீங்கள் ஏன் சனிக்கிழமைகளில் ஆலயத்திற்குச் செல்வதில்லை?'' என்று போதகரிடம் கேட்டார்.

''அது முக்கியமல்ல, அந்த நாள் சாதாரண ஒரு நாள்தான்'' என்று அவர் பதிலளித்தார்.

ஆனால்தான் கண்டுகொண்ட விஷயத்தை நிகாவால் புறக்கணிக்க முடியவில்லை.

'அது சாதாரண ஒரு நாள் அல்ல' என்று தனக்குள் நினைத்துக் கொண்டார்.

'எனக்குச் சத்தியத்தைக் காண்பியும்' என்று ஜெபிக்கத் தொடங்கினார்.

இணையத்தில் தேடிக்கொண்டிருந்தபோது, ஒரு யூடியூப் பக்கத்தை நிகா பார்த்தார். அதில் மறு பிறப்பு, சிருஷ்டிப்பு, வேதவசனங்களின் நம்பகத்தன்மை போன்று, ஒரு காலத்தில் தனக்கு விடை கிடைக்காமல் இருந்த விஷயங்களைப்பற்றிச் சொல்லப்பட்டிருந்தது. அதில் காட்டப்பட்ட விளக்கக் காட்சிகள் அவருக்கு மிகவும் அர்த்தமுள்ளவையாக இருந்தன. அதைப் பேசியவர் ஒரு செவந்த்- டே அட்

வென்டிஸ்ட் என்றும், அவர் விரைவில் உள்ளூர் அட்வென்டிஸ்ட் சபை ஒன்றில் பேச உள்ளார் என்றும் நிகா அறிந்துகொண்டார். அதில் கலந்துகொள்ள முடிவு செய்தார்.

அங்கேயும், அவர் கேட்ட விஷயங்கள் அவரது மனதில் ஆழமாகப் பதிந்தன.

அதற்கும் மேலாக, அங்கிருந்த மக்கள் அவரை அன்புடன் வரவேற்றனர். குறிப்பாக, அந்தச் சபையின் நூலகரான மிலேட்டா, ‘‘கண்டுகொண்டேன் வேதாகம அஞ்சல் பள்ளியில் சேர விருப்பமா’’ என்று அவரிடம் கேட்டார்.

‘‘நான் பாடங்களை வீட்டில் இருந்தே படிக்கிறேன், நாம் வாரத்திற்கு ஒருமுறை கூடி ஆராய்ச்சி செய்யலாம்’’ என்றார் நிகா.

ஒவ்வொரு முறையும் மூன்று முதல் நான்கு மணி நேரம் அவர்கள் ஒன்றாகப் படித்தனர். நிகாவுக்கு எலன் ஒய்ட்டின் புத்தகங்களை மிலேட்டா அறிமுகப்படுத்தினார். நிகாவும் அவற்றை ஆர்வத்துடன் வாசித்தார். சத்தியமானது தெளிவாகவும், வேதாகமத்தின் அடிப்படையிலும், முரண்பாடுகள் இல்லாமலும் அவருக்கு வெளிப்படத் தொடங்கியது.

ஓய்வுநாளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று மனதிற்குள் உறுதியாக உணர்ந்தார். அதற்காக, கடினமான ஒரு முடிவை நிகா எடுத்தார். ஓய்வுநாளில் வேலை ஏதும் இல்லாமல் இருப்பதற்காக, தனது வேலையை விட்டுவிட்டு, ஒரு இரவு நேரக் காவலராக ஒரு வேலையில் சேர்ந்தார். நீண்டநேர, அமைதியான அந்த இரவுநேரப் பணி, படிக்கவும் சிந்திக்கவும் அவருக்குப் நேரத்தைக் கொடுத்தது.

இறுதியாக, இதுவரை தான் தேடி வந்த ஒன்றை அடைந்துவிட்டார்.

2023, டிசம்பர் 16 அன்று நிகா ஞானஸ்நானம் பெற்றார். வரலாற்றுச் சிறப்புமிக்க சாகிரேப் 1 திருச்சபை கட்டிடம் 2020ம் ஆண்டின் நிலநடுக்கத்தில் பலத்த சேதமடைந்திருந்ததால், மற்றொரு அட்வென்டிஸ்ட் திருச்சபையில் அவருடைய ஞானஸ்நான ஆராதனை நடைபெற்றது.

அவருடைய குடும்பத்தினர் இதில் கலந்துகொண்டனர். நீண்டகாலமாகத் தன்னை ஒரு நாத்திகர் என்று கூறிவந்த அவருடைய வளர்ப்புத் தந்தை, அதற்குப் பிறகு அவரிடம், ‘‘நீ சரியான இடத்தில் தான் இருக்கிறாய்’’ என்று கூறினார். சில வாரங்களிலேயே, அவர் காலமானார். நிகா அந்த வார்த்தைகளைத் தன் நெஞ்சில் பதித்துக்கொண்டு, தன் தாய் மற்றும் சகோதரர்களுக்காகத் தொடர்ந்து ஜெபித்து வருகிறார்.

அவர் ஞானஸ்நானம் பெற்று ஆறு மாதங்களுக்குப் பிறகு, எதிர்பாராத ஒரு வாய்ப்பு வந்தது. கொரோனா பெருந்தொற்று காலத்தில், பள்ளி வகுப்புகளுக்குப் பிறகு மாணவர்களுக்கு உதவுகிற வகையில் ஒரு பயிற்சி வகுப்பை ஆரம்பித்தார்கள். அது, ‘பிரிலாஸ் பள்ளி’ என்று அழைக்கப்பட்டது. அதற்கு ஓர் ஆசிரியை தேவைப்பட்டார். நிகா அப்பணியில் சேர்ந்தார்.

## குரோஷியா



# வெற்றிடம் நிரம்பியது

*ஆர்வத்துடனும் உண்மையாகவும் வேதாகமத்தை வாசிக்கவும் ஜெபிக்கவும் தொடங்கினான்.*

கூடைப்பந்துதான் கோரனின் வாழ்க்கையாக இருந்தது.

12 வயது முதலே, அதைப் பற்றியே சிந்தித்தான்; கனவு கண்டான்; ஒரு தொழில்முறை கூடைப் பந்து ஆட்டக்காரனாக மாறவேண்டும் என்கிற ஒரே இலக்கை நோக்கியே தன் அடையாளத்தை உருவாக்கினான். குரோஷியாவில் பள்ளிப் படிப்பை முடித்த பிறகு, அமெரிக்காவில் உள்ள யுனிவர்சிட்டி ஆப் மெய்ன் அட் ஃபோர்ட் கென்ட் பல்கலைக்கழகத்தில் கூடைப்பந்து விளையாட்டிற்கான கல்வி உதவித்தொகை கிடைத்தது; அவனது கனவு நனவாவதுபோல் தோன்றியது.

வடக்கு மெய்ன் பகுதியில், வணிக மேலாண்மை படிப்பைப் படித்தான், அதோடு மாணவர்- தடகளவிளையாட்டு வீரர்களுக்கான திட்டத்தின் ஒரு பகுதியாக தீவிரப் பயிற்சியும் பெற்றான். ஆனால், கல்லூரிப் படிப்பின் இறுதி ஆண்டில்தான், யதார்த்த நிலை அவனுக்குப் புரிந்தது. தொழில் முறை தகுதிச் சுற்றுப் போட்டிகளுக்குள் நுழைய முடியாது என்பது தெளிவாகத் தெரிந்தது.

“என்னுடைய வாழ்நாள் கனவு சிதைந்து போனதால், எல்லாமே அர்த்தமற்றதாகத் தோன்றியது” என்று கூறினான்.

அறிவியல் இளங்கலைப் பட்டம்பெற்றபின்குரோஷியாவிற்குத் திரும்பினான், அங்கு சாகிரேப் நகரில் வரி ஆலோசனைத் துறையில் ஒரு வேலையில் சேர்ந்தான். வெளிப்பார்வைக்கு வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்ந்ததுபோலத் தெரிந்தாலும், உள்ளுக்குள் முற்றிலும் வெறுமை

யாகவே உணர்ந்தான்.

''நான் ஒரு இரவு விடுதியில் இருந்தபோது, 'நான் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறேன்? இந்த வாழ்க்கையும் அர்த்தமற்றதாக இருக் கிறதே' என்று திடீரென்று எனக்குள் ஓர் எண்ணம் தோன்றியது'' என்று சொன்னான்.

கோரன் ஒரு நல்ல குடும்பத் தில் வளர்ந்தவன். கூடைப்பந்து விளையாட்டில் தீவிர ஆர்வம்காட் டத் தொடங்கிய அதே கால கட்டத் தில், அவனுடைய தாய் செவந்த்-டே அட்வென்டிஸ்டுகளுடன் வேத ஆராய்ச்சியில் கலந்துகொள்ளத் தொடங்கி, ஞானஸ்நானமும் பெற் றார். எப்போதாவது கோரனும் அவ ருடன் ஆலயத்திற்குச் செல்வதுண்டு. அவன் அமெரிக்காவிற்குப் புறப் படுவதற்கு முன்பு, அவனுடைய தாய் அவனுக்கு ஒரு ஆங்கில வேதாகமத்தைக் கொடுத்தார்.

பல்கலைக்கழகத்தில் படித்த போது, சில சமயங்களில் அதை வாசித்தான், குறிப்பாக வெளிப்படுத் துதல் புத்தகத்தை வாசித்தான், அது அதிகமாகப் புரியவில்லை. கடின மான தருணங்களில், ஜெபிக்கவும் செய்தான். ஆனால், தேவனுடன் தனிப்பட்ட ஓர் உறவை அவன் ஒருபோதும் உணர்ந்ததில்லை.

இப்போது, குரோஷியாவிற் குத் திரும்பின பிறகு, வாழ்க்கையின் நோக்கத்தைக் கண்டுபிடிக்க, மீண் டும் முயற்சிக்க முடிவு செய்தான்.

''மற்ற எல்லாவற்றையும் முயற் சித்துப் பார்த்துவிட்டேன், தேவனு டன் வாழ்வது எப்படி இருக்கும் என் பதைத் தெரிந்துகொள்ள வேதாக மத்திடம் திரும்பிச்செல்வது மட் டும்தான் இப்போது மீதமிருக்கும் ஒரே வழி என்று எனக்குள் சொல் லிக்கொண்டேன்'' என கூறினான்.

ஆர்வத்துடனும் உண்மையா கவும் வேதாகமத்தை வாசிக்கவும் ஜெபிக்கவும் தொடங்கினான். தன் அம்மா செய்கிறபடியே செய்யா மல், தனக்கான வழியைத் தானே கண்டறிய விரும்பி, ஞாயிறு ஆச ரிப்பு சபை ஒன்றிற்குச் சென்றான். ஆனால் ஒரு விஷயம் அவனை வருத்திக்கொண்டே இருந்தது

''என் கண்ணில் குத்திய முள் ளாக எப்போதுமே இருந்தது ஓய்வு நாள்தான், வேதாகமம் அதைப் பற்றி என்ன சொல்கிறது என்பது எனக்கு சிறுவயதிலிருந்தே தெரி யும்'' என்று சொன்னான்.

வேத ஆராய்ச்சிக் குழுவில் யாத்திராகமம் 20 ஆம் அதிகாரத்தை ஆராயத் துவங்கியபோது, அதை மிகவும் கவனமாகக் கேட்டான். ''நம்முடைய ஓய்வுநாள் இப் போது ஞாயிற்றுக்கிழமை'' என்று நான்கா வது கட்டளைக்கு சுருக்கமாக விளக் கம் கொடுத்து முடித்து விட்டார்கள். அதன் பிறகு அவர்கள் அடுத்த பகு திக்குச் சென்று விட்டார்கள்.

ஆனால் கோரன் அதை ஏற்க வில்லை.

ஒரு நாள் இரவு, தன் இருத யத்தைத் திறந்து உருக்கமாக ஜெபித் துக் கொண்டிருந்தபோது, ஏசாயா 58 ஆம் அதிகாரத்தைத் திருப்பினான். 'ஓய்வுநாள் மனமகிழ்ச்சியின் நாள்' என்று அங்கு சொல்லப்பட்டிருப்ப தைப்பற்றிய வரிகளை வாசித்தான். அந்த வார்த்தைகள் அவனது மன

தில் ஆழமாகப் பதிந்தன. அவனுடைய உள்ளத்தில் இருந்த சந்தேகம் நீங்கி, தெளிவு பிறந்தது.

அவன் சாகிரேப் 1 செவந்த்-டே அட்வென்டிஸ்ட் திருச்சபைக்குச் செல்ல முடிவு செய்தான். தன்னுடன் வருமாறு தன் அம்மாவையும் அழைத்தான்.

“நான் அங்கே சென்றதும், என் சொந்த வீட்டிற்குத் திரும்பியதுபோல என் உள்ளத்தில் உணர்ந்தேன்” என்றான் கோரன்.

ஞானஸ்நானம் பெற ஆயத்தமானான், ஆனால் எலன் ஜி. ஒய்ட் பற்றிய கேள்வி மட்டுமே எஞ்சியிருந்தது.

இந்தக் காலகட்டத்தில், திருச்சபையில் டேனியலா என்கிற ஒரு இளம் பெண்ணைச் சந்தித்தான், பின்னாளில் அவர் கோரனின் மனைவியானாள். எலன் ஒயிட்டின் தீர்க்கதரிசன ஊழியத்தைப்பற்றிய தனது சந்தேகங்களை கோரன் அவளிடம் பகிர்ந்து கொண்டார்.

அதற்கு டேனியலா, “சரி, உங்களுடைய கருத்தில் நான் தலையிட விரும்பவில்லை, ஆனால் ஒரே ஒரு வீடியோவை மட்டும் பாருங்கள்” என்று சொன்னாள்.

ஒரு தீர்க்கதரிசியைக் குறித்த வேதாகம விளக்கங்கள் அதில் தெளிவாக இருந்தன. அங்கு சொல்லப்பட்டது மிகவும் அர்த்தமுள்ளதாக இருந்தது. கோரன் அவராகவே புத்தகங்களைவாசிக்கத்தொடங்கினார்.

“நான் வேதாகமத்தையும் அவருடைய எழுத்துக்களையும் எவ்வளவு அதிகமாகப் படித்தேனோ, அவ்வளவு அதிகமாக சரியான பாதையில்தான் இருக்கிறேன் என்பதில் எனக்கு உறுதியான நம்பிக்கை ஏற்பட்டது” என்று அவர் கூறினார்.

அவர் சாகிரேப் 1 திருச்சபையில் ஞானஸ்நானம் பெற்றார். ஆறு மாதங்களுக்குப் பிறகு, அவருக்கும் டேனியலாவிற்கும் அங்கேயே திருமணம் நடந்தது.

“இறுதியாக எனக்குள் காணப்பட்ட அந்த வெற்றிடம் நிரம்பியது, அதை நான் இயேசுவிடம் கண்டடைந்தேன்” என்று கூறினார்.

ஆனால், அத்தோடு கதை முடிந்துவிடவில்லை.

மற்றவர்களும் இதேபோன்ற மகிழ்ச்சியைப் பெறவேண்டுமென விரும்பிய கோரனும் டேனியலாவும், பேஸ்புக்கில் ‘இலவச புத்தகங்கள்’ என்ற ஒரு சமூக உதவித் திட்டத்தைத் தொடங்கினார்கள். அவர்கள் மாபெரும் போராட்டம், யுகங்களின் வாஞ்சை மற்றும் பிற கிறிஸ்தவப் புத்தகங்களை அஞ்சல் கட்டணம் ஏதுமின்றி முற்றிலும் இலவசமாக வழங்கினார்கள்.

இதற்கு கிடைத்த வரவேற்பு அபாரமானது. குரோஷியா முழுவதும் 10,000 க்கும் மேற்பட்ட புத்தகங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. ஆர்வம் அதிகரித்ததைத் தொடர்ந்து டிரான்ஸ் யூரோப்பியன் டிவிஷன் இத்திட்டத்தை விரிவுபடுத்த உதவியது. மேலும், அண்டை நாடுகளிலும் இதேபோன்ற முயற்சிகள் தொடங்கப்பட்டன.

அச்சிடப்பட்ட வேதாகமப் பாடங்களை ‘வேதாகம சத்தியம்’ என்கிற ஆன்லைன் படிப்பாக மாற்றினார்கள்.

குரோஷியா



# வளருவதற்கான இடம்

*அந்த எண்ணம் அவனை விட்டுப் போகவில்லை. அது மேலும் வளர்ந்தது.*

லியோன் முதன்முதலில் மருஷேவெக்கில் வேதாகம முகாமிற்குச் சென்றபோது அவனுக்கு ஏழு வயது. அவனுடைய பெற்றோர்களும் சிறு பிள்ளைகளாக இருந்தபோது இதே முகாமிற்குச் சென்றிருந்தார்கள். 1972 ஆம் ஆண்டு முதல் அந்த முகாம் நடந்து வருகிறது; குரோஷியா முழுவதும் உள்ள அட்வென்டிஸ்ட் குடும்பத்தினர் கோடைக்காலத்தில் அந்த முகாமில் கலந்துகொள்வது பாரம்பரியமாக நடந்துவருகிறது.

லியோன் கலந்துகொண்ட அந்த முதல் வாரம் அனைத்தையும் மாற்றியது.

"அங்கே 50 முதல் 100 சிறுவர்கள் இருந்தனர், ஒவ்வொரு நாளும் வேதவகுப்பும், பயிற்சிப் பட்டறைகளும், பாடல் பாடுதலும், புகைப்படம் எடுத்தலும், விளையாட்டுகளும் இருந்தன. ஒவ்வொரு நாளும் இரவு உணவிற்குப் பிறகு ஆராதனை நடைபெறும்" என்று சொல்கிறான்.

ஆனால் அவனுக்கு அதிகம் பிடித்திருந்தது பேஸ்பால் விளையாட்டுதான்.

அது அமெரிக்க பேஸ்பால் போன்றதல்ல; குரோஷியாவில் விளையாடப்படுகிற ஒரு வகை பேஸ்பால். டென்னிஸ் பந்துகளால் தற்காலிகமாக உருவாக்கப்பட்ட தளங்களில் விளையாடுவார்கள், மைதானத்தில் கூடியிருப்பவர்களுக்கு மிகவும் வேடிக்கையாக இருக்கும், ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான ஒரு பாரம்பரியமாக அந்த விளையாட்டு நடைபெற்று வருகிறது.

“ஒவ்வொரு நாள் மாலையும் ஒன்பது மணி வரை விளையாடு வோம், அதுதான் அந்த முகாமின் மிக முக்கியமான விஷயம்!” என்று லியோன் கூறுகிறான்.

ஒவ்வொரு வாரத்தின் நிகழ்ச் சிகளும் சிறுவர்களின் ஓய்வுநாள் நிகழ்ச்சியுடன் நிறைவுபெறும். அச் சிறுவர்கள், பாடல்கள் பாடுவார் கள், நாடகங்கள் போடுவார்கள், தங் கள் பிள்ளைகள் கற்றுக்கொண்ட காரியங்களைப் பார்க்க வந்த பெற் றோருக்கான ஆராதனை விளக்கக் காட்சிகளைக் காட்டுவார்கள். மேலும் ஒவ்வொரு ஆண்டும், அட் வென்டிஸ்ட் அல்லாத தங்கள் நண் பர்களையும் சிறுவர்கள் அங்கு அழைத்து வருவதுண்டு.

கடந்த ஆண்டு, அந்த முகா மில் மூன்று இளைஞர்கள் ஞானஸ் நானம் பெற்றனர்; அதில், இரண்டு அட்வென்டிஸ்ட் இளைஞர்களும், விருந்தினராக வந்த ஒருவரும் அடங் குவர். அந்த முகாமில் வெறும் விளையாட்டுகள்மட்டும் நடப்ப தில்லை. அங்கே விசுவாசத்தை செயலில் வெளிப்படுத்தினார்கள். அது லியோனின் இதயத்தில் ஆழ மான தாக்கத்தை உண்டாக்கியது.

2018 ஆம் ஆண்டில் மருஷே வெக்கில் உள்ள உயர்நிலைப் பள்ளி யில் உடலியக்க மருத்துவப் படிப் பில் சேர்ந்தபோது, வேறு சில விஷ யங்களும் மாறியிருந்தன.

முந்தைய பதின்மூன்றாவது வார ஓய்வுநாள் காணிக்கையின் உதவியால் புத்தம் புதிய மாணவர் விடுதி அப்போதுதான் திறக்கப்பட் டிருந்தது.

“அது மிகவும் தனித்துவமாகக் கட்டப்பட்டிருந்தது, சாவிகளால் அல்ல, அடையாள அட்டைகளால் கதவுகளைத் திறக்கிற நவீன வசதி யுடன்கூடிய கட்டிடம். அது ஒரு ஹோட்டல்போல இருந்தது” என்று லியோன் கூறுகிறான்.

பழைய விடுதியில் ஒவ்வோர் அறையில் நான்கு மாணவர்கள் தங் கலாம். புதிய விடுதியானது, ஓர் அறைகளில் இரண்டு பேர் மட்டுமே தங்குகிற வகையில் கட்டப்பட்டிருந் தது. புதிய அறைகளில் குளிர்சாதன வசதி, நவீன மரச்சாமான்கள் மற்றும் இரண்டு அறைகளுக்கு இடையே ஒரு பொதுவான குளியலறை ஆகி யவை இருந் தன.

அது நவீனமாக, சுத்தமாக, வசதியாக இருந்தது. மேலும் மாண வர் மன்றமானது அந்த விடுதியுடன் இணைக்கப்பட்டிருந்தது.

அருகிலேயே கூடைப்பந்து மற்றும் கைப்பந்து மைதானங்கள் இருந்தன; இவை இயல்பாகவே நட்புகள் உருவாகும் இடங்களாக மாறின. லியோனின் தலைமுறை யினருக்கு, அந்தப் புதிய விடுதி வெறும் ஒரு கட்டிடம் மட்டுமல்ல, அது ஒரு வீடாகவே இருந்தது.

சில மூத்த மாணவர்கள் பழைய விடுதியின் நினைவுகளில் மூழ்கி யிருந்தனர். ஆனால் புதிய விடுதி யில் வளர்ந்தவர்களுக்கு, அது மாண வர் வாழ்க்கையின் மையமாக மாறி யது. படிப்பதற்கும், சிரிப்பதற்கும், நம்பிக்கையைப்பற்றி பேசுவதற்கும் மற்றும் ஒரு சமூகத்தை உருவாக்கு வதற்கும் உரிய இடமாக அது விளங் கியது.

தொழில்முறைப் பயிற்சிக்காக வந்த மாணவர்களும் ஒரு சொந்த பந்த உணர்வை அங்கே பெற்றுக் கொண்டார்கள்.

சிறுவனாக இருந்தபோது, லியோன் ஒருமுறை தனது ஆரம் பப்பள்ளி தலைமை ஆசிரியரிடம், "வார நாட்களில் நான் கற்செதுக் கும் கலைஞனாக வேலைசெய்ய வும், ஓய்வுநாளில் போதகப்பணி செய்யவும் விரும்புகிறேன்" என்று கூறியிருந்தான்.

ஆனால் உயர்நிலைப் பள்ளி யில், அவனுக்கு விளையாட்டுகள், உடற்கூறியல் மற்றும் மனித உடல் குறித்து படிப்பதில் ஆர்வம் ஏற்பட் டது. இதனால் உடலியக்க மருத்து வம் படிப்பதே அவனுக்குச் சரியான தாகத் தோன்றியது. அந்தப் படிப்பை முடித்து, அடுத்தகட்ட உயர் கல்விக் குச் செல்லவும் நன்கு தயாராக இருந் தான்.

ஆனாலும், லியோன் உயர் நிலைப் பள்ளியின் கடைசி ஆண் டில் இருந்தபோது, ஒரு பழைய எண் ணம் மீண்டும் மெதுவாக அவனுக் குள் எட்டிப்பார்த்தது.

"அந்த எண்ணம் எப்போது உருவானது என்று தெரியவில்லை. ஆனால் நான் மீண்டும் போதகப் பணிபற்றி யோசிக்கத் தொடங்கி னேன்" என்று சொன்னான்.

அந்த எண்ணம் அவனை விட் டுப் போகவில்லை. அது மேலும் வளர்ந்தது.

லியோன் தனது பேராசிரியர் களிடம் அதுபற்றிப் பேச ஆரம்பித் தான். தனது பெண்தோழியிடமும், பெற்றோரிடமும் பேசினான். அதற் காக ஜெபித்தான், சிந்தித்துப் பார்த் தான். அவனுக்குள் இருந்த அந்த அழைப்பின் உணர்வு மேலும் தெளி வாகியது.

அவன் மருஷேவெக்கில் இறை யியல் படிப்பில் சேர்ந்து, இளங் கலைப் பட்டத்தை முடித்தான். இன்று 24 வயதாகும் லியோனுக்கு திருமண மாகிவிட்டது, போதகர் பயிற்சி மாண வனாகப் பணியாற்றி வருகிறான்.

ஆனாலும் அந்த வேதாகம முகாம்மட்டும் இன்னும் மறக்கமுடி யாத ஒரு நினைவாகவே உள்ளது.

கடந்த சில ஆண்டுகளில், மீண் டும் அங்கு சென்றான்; முதலில் சிறு பிள்ளைகளுக்கான ஒரு ஆலோச கராகவும், பின்னர் ஒரு வேதாகம ஆசிரியராகவும், அதன் பிறகு ஒரு விரிவுரையாளராகவும் சென்றான்.

குரோஷியா மற்றும் ஸ்லோ வேனியா முழுவதும் உள்ள பதின்ம வயது சிறுவர்களுக்காக வார இறுதி யில் நடத்தப்படு கிற 'டீன் கனெக்ட்' என்கிற ஆவிக்குரிய முகாமைத் தொடங்கவும் வழிநடத்தவும் உதவி னான். ஏனெனில் அங்கு சிறுவர் களுக்காக பல திட்டங்கள் இருந்த போதிலும், குறிப்பாக பதின்ம வய தினருக்காக மிகச் சில திட்டங்களே இருந்தன.

"நாங்கள் எப்போதும் சமூகப் பணிச் செயல்பாடுகளையும் இதில் சேர்த்துக் கொள்கிறோம், முதியோர் இல்லங்களுக்குச் செல்வது, வளா கத்தைச் சுத்தம் செய்வது, மற்றும் ஆவிக்குரிய புத்தகங்களை விநியோ கிப்பது போன்றவை அந்தத் திட்டங் களில் அடங்கும்" என்று கூறுகி றான்.



# ஊழியக்களமான ஒரு பள்ளி

*“கவலைப்படாதீர்கள், நாங்கள் ஜெபிக்கிறோம்” என்று சொன்னார்கள். ஜெபித்தார்கள். மழையும் நின்றது.*

வார்சாவுக்கு அருகிலுள்ள அரசுப் பள்ளிகளில் ஏறக்குறைய 20 ஆண்டுகளாக போலந்து மொழியை யும் இலக்கியத்தையும் கற்பிக்கி ஆசிரியையாக அகதா பணியாற்றி வந்தார். அவருக்கு ஆசிரியப்பணி பிடிக்கும், ஆனால் காலம் செல்லச் செல்ல ஏதோ ஒன்று குறைவுபடுவ தாக உணர்ந்தார். வகுப்பில் மாண வர்கள் அதிகம் இருந்தார்கள், அவ சர அவசரமாக பாடங்களை நடத்த வேண்டியிருந்தது, அதனால் மாண வர்களைப்பற்றித் தெரிந்துகொள்ள மிகக்குறைந்த நேரமே இருந்தது.

“ஏதோ பாடம் நடத்தினோம், சென்றோம் என்று இராமல், என் மாணவர்களைப்பற்றி அறிந்து கொள்ள ஆசைப்பட்டேன். அவர்க ளுடைய தேவைகள், திறமைகள், அவர்களின் குடும்பங்கள் என அனைத்தையும்பற்றி உண்மையி லேயே தெரிந்துகொள்ள விரும்பி னேன்” என்று அகாதா சொன்னார்.

அந்த விஷயத்தில் கண்டிப் பாக ஒரு மாற்றத்தைச் செய்தாக வேண்டுமென 2018 ஆம் ஆண்டில், தீர்மானம் எடுத்தார்.

அதே ஆண்டில், அட்வென் டிஸ்ட் பெற்றோர் சிலர் ஒன்றுகூடி, ஒரு ஆலய வளாகத்தில் மழலையர் பள்ளி வயதுக் குழந்தைகளுக்கு ஆங் கில வகுப்புகளை நடத்தத் தொடங் கினார்கள். அந்த ஒரு சில குடும்பத் தினரால் தொடங்கப்பட்ட அந்த வகுப்பை தொடர்ந்து நடத்துவதற் கான அவசியம் ஏற்பட்டது. அதின் நிமித்தமாக, அந்த வகுப்புகளில் கலந்துகொண்ட மாணவர்களின் பெற்றோர், விசுவாசம், உறவுகள், நோக்கம் ஆகியவற்றிற்கு உதவுகிற

ஒரு அட்வென்ட்டிஸ்ட் பள்ளியில் தங்கள் பிள்ளைகள் படிப்பதற்கு ஆசைப்பட ஆரம்பித்தார்கள்.

தங்களுக்கு உதவுமாறு அந்தப் பெற்றோர் அகதாவிடம் கேட்டுக் கொண்டனர்.

அகாதாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரே ஒரு வகுப்பறை மட்டுமே இருந்தது, மேலும் அதற்கான நிதியும் மூன்று மாதங்களுக்கு தாக்குப்பிடிக்கிற அளவுக்குத்தான் இருந்தது. அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டால், நிரந்தர ஆசிரியை பணிக்கான சம்பளம் கிடைக்காது; அதே நேரத்தில் வீட்டுக்கடனையும் அடைக்கவேண்டும், பெரும்பாலும் தனது கணவரின் வருமானத்தையே நம்பியிருக்க வேண்டும்.

“நான் நிறைய ஜெபித்தேன், அது என் வாழ்க்கையின் மிகக் கடினமான முடிவுகளில் ஒன்றாக இருந்தது” என்று அகாதா சொன்னார்.

அவர் தன்னுடைய கணவரிடம் ஆலோசனை கேட்டபோது, “முயற்சி செய்துதான் பாரேன்” என்று சொல்லிவிட்டார்.

நம்பிக்கையுடன் அடுத்த அடியை எடுத்து வைத்தார் அகதா. மூன்று மாதங்கள் கடந்தன; அதன் பிறகு கூடுதல் நிதி கிடைத்தது. “எங்களிடம் பணம் இல்லாத ஒரு தருணமே இருந்ததில்லை, ஆரம்பம் மிகவும் கடினமாக இருந்தபோதிலும், தேவன் அதை ஆரம்பத்திலிருந்தே ஆசீர்வதித்தார்” என்று கூறினார்.

அவ்வாறு நிச்சயமற்ற ஒரு சூழலில் ஆரம்பிக்கப்பட்டதுதான் ‘காம்பஸ்’ பள்ளி. அது 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்கப்படுகிற ஒரு அட்வென்டிஸ்ட் ஆரம்பப் பள்ளியும், மழலையர் பள்ளியும் ஆகும். சில வருடங்களிலேயே, மாணவர் சேர்க்கை ஆரம்பப் பள்ளியில் 50 ஆகவும், மழலையர் பள்ளியில் 32 ஆகவும் உயர்ந்தது. தங்களுடைய பணியை தெய்வீக அழைப்பாகக் கருதுகிற ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் ஆதரவால் இது சாத்தியமானது.

இந்த வெற்றிக்கு தன்னுடைய குழுவினரே காரணமென அகாதா கூறுகிறார். “இது வெறும் வேலை மட்டுமல்ல, நாங்கள் இதை ஒரு ஆவிக்குரிய பணித்தளமாகவும் பார்க்கிறோம்” என்று சொன்னார். அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டு, குறிப்பிட்ட நோக்கமும் ஆவிக்குரிய அரவணைப்பும் காண்ப்படுகிற ஒரு பள்ளி கலாச்சாரத்தை உருவாக்கியுள்ளனர்.

பள்ளி வளர்ந்தபோது, அதனுடைய கல்வி நியதியும் வளர்ந்தது. அட்வென்டிஸ்ட் கல்வி என்பது வழக்கமான பாடத்திட்டத்துடன் வேதாகம வகுப்பையும் சேர்ப்பது மட்டுமல்ல என்பதை அகதாவும் அவரது சக ஊழியர்களும் உணர்ந்தனர். அது ஒரு பிள்ளையின் உடல், உணர்ச்சி,அறிவுமற்றும்ஆவிக்குரிய அம்சங்கள் அனைத்தின் வளர்ச்சியையும் உள்ளடக்கியது.

அதில் வெளிப்புறக் கல்வி ஒரு முக்கியப் பங்காற்றுகிறது. வேத வகுப்புகளை வகுப்பறைக்குள்ளே தொடங்கி, பிறகு இயற்கையான சூழ

லில் தொடருகின்றனர். அங்கே பிள்ளைகள் தங்களைச் சுற்றி காணப்படுகிற மேகங்கள், மரங்கள், மண் மற்றும் வானம் ஆகியவற்றோடு வேதாகம வசனங்களை ஒப்பிட்டுப் புரிந்துகொள் கிறார்கள்.

"இயற்கையில் அமர்ந்து கற்றுக்கொள்ளும்போது, தேவனுடைய படைப்பின் மத்தியில் சிறுவர்கள் இருக்கிறார்கள், தூய்மையான காற்றைச் சுவாசிக்கிறார்கள், ஓடி ஆடி விளையாடுகிறார்கள், அதனால் அவர்களின் மனம் நன்றாகச் செயல்படுகிறது. மேலும், இயற்கை என்பது தேவன் உருவாக்கிய ஒன்று என்பதையும் அவர்கள் புரிந்துகொள்கிறார்கள்" என்று அகதா கூறினார்.

மொண்டெஸோரி கல்வி முறைகள், ஒவ்வொரு குழந்தையின் திறமைக்கு ஏற்ப ஆசிரியர்கள் கற்றுக்கொடுக்க உதவுகின்றன. சிறுவயது மாணவர்கள் தங்களுக்குத் தேவையான உபகரணங்களின் உதவியால், தங்களால் முடிந்த வேகத்தில், தேவையான வழிகாட்டுதலுடன் கற்றுக்கொள்கிறார்கள்.

காம்பஸ் பள்ளியில் விசுவாசம் வகுப்பறையோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. மாணவர்கள் தங்கள் பகுதியிலுள்ள முதியவர்களைச் சந்திப்பது, வேத வசனங்கள் அடங்கிய கையால் செய்யப்பட்ட வாழ்த்து அட்டைகளைப் பகிர்வது மற்றும் தனிமையில் இருப்பவர்களுக்காகப் பாடுவது போன்ற சமூகச் சேவைகளிலும் ஈடுபடுகிறார்கள்.

வெள்ளிக்கிழமைகளும் இங்கு வித்தியாசமாக இருக்கும். மாணவர்கள் தோட்ட வேலைகளிலும், பள்ளி வளாகத்தைச் சுற்றிச் செய்யவேண்டிய வேலைகளிலும் ஈடுபடுகிறார்கள். வண்ணமடிப்பது, பெருக்குவது, இலைகளைக் கூட்டுவது, விறகு சேகரிப்பது போன்ற வேலைகளைச் செய்கிறார்கள். மண்ணில் விதைக்கப்படும் விதைகள் தேவ வார்த்தையைப்பற்றிய பாடங்களாக மாறுகின்றன. வாரத்தின் இறுதி நாட்களில், பெரும்பாலும் தீ மூட்டி சுற்றிலும் அமர்ந்து, மழலையர் பள்ளி பிள்ளைகளும் பெரிய மாணவர்களும் ஒன்றாகக் கூடி, பேசி, விளையாடுகிறார்கள்.

காலப்போக்கில், பிள்ளைகளிடம் மாற்றம் உண்டானதை அகதாவும் அவருடைய சக ஊழியர்களும் கவனித்தனர்.

"இங்குள்ள சூழல் குழந்தைகளின் இதயங்களை மாற்றுகிறது, அவர்கள் ஒருவருக்கொருவர் நாகரிகமாகப் பேசுகிறார்கள், தங்கள் வார்த்தைகள் யாரையாவது புண்படுத்துமா என்று யோசித்துப் பேசுகிறார்கள். முதல் வகுப்பு பிள்ளைகள்கூட மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்கிறார்கள். பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்வதைக் காண்கிறோம்" என்று சொன்னார்.

மழை பெய்துகொண்டிருந்த ஒரு நாளில் வெளியில் சென்றிருந்தார்கள். எட்டு வயதுடைய இரண்டு பிள்ளைகள், அதாவது, அவரது மகளும் அவள் வகுப்புத் தோழனும், "கவலைப்படாதீர்கள், நாங்கள் ஜெபிக்கிறோம்" என்று சொன்னார்கள். அவர்கள் ஜெபித்தார்கள். மழையும் நின்றது.

போலந்து



# இருதயங்கள் திறக்கிற வேதாகமம்

*மோனிகா அந்தக் கதைகளை அவர்களுக்குச் சொல்கிறார்; வேதாகமத்தின்மீது நம்பிக்கையை உருவாக்குகிறார்.*

அட்வென்டிஸ்ட் பள்ளியில் ஆசிரியையாக வேலைசெய்வது பற்றி மோனிகா ஒருபோதும் யோசித்ததே இல்லை.

2022ஆம் வருடத்தில், ஒரு திருமண விழாவில் ஒருவரோடு பேசிக்கொண்டிருந்த போதுதான், காம்பஸ் அட்வென்டிஸ்ட் ஆரம்பப் பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்ற அவருக்கு விருப்பமா என்று அவர் கேட்டார். அவ்வாறுதான் அந்தப் பயணம் எதிர்பாராமல் துவங்கியது. அவ்வாறு கேட்டதும், முழு நிச்சயத்தோடு பதில் சொல்லமுடியவில்லை. ஆனால் அவருக்கு வரலாற்றுப் பாடத்தின்மீது மிகுந்த ஆர்வம்இருந்தது; மேலும் வீட்டுக்கல்வி மூலம் தனது பிள்ளைகளுளுக்கு பாடம் நடத்திய அனுபவமும், அவ்வாறு வீட்டுக்கல்விமூலம் தங்கள் பிள்ளைகளுக்குப் பாடம் நடத்தின குடும்பத்தினருடன் சேர்ந்து பல ஆண்டுகள் கற்றுக்கொண்ட அனுபவமும் அவரிடம் இருந்தது.

“பாடத்திட்டம்பற்றி எனக்கு நன்றாகத் தெரிந்திருந்தது, மேலும் சிறுவர்கள் எவ்வாறு புரிந்துகொள்கிறார்கள் என்பதையும் அறிந்திருந்தேன்” என்று சொன்னார்.

அவர் முயற்சி செய்து பார்க்க ஒப்புக்கொண்டார்.

இன்று, மோனிகா 4 முதல் 8 ஆம் வகுப்பு வரை வரலாறு பாடம் நடத்துகிறார். மேலும் 5 மற்றும் 6 ஆம் வகுப்புகளுக்கு வகுப்பாசிரியராகவும் உள்ளார். மாணவர்கள் அடுத்தடுத்த வகுப்புகளுக்குச் செல்லும்போது அவரும் அந்த வகுப்புகளுக்கு மாறுகிறார், இதனால் அவர்களைப்பற்றி நன்றாகத் தெரிந்து

கொள்ள அது உதவியாக இருக்கிறது. அவர் சில போலந்து மொழிப் பாடங்களையும் கற்பிக்கிறார். "நாங்கள் ஒன்றாக வளர்ந்து வருகிறோம்" என்று கூறினார்.

அவரது வகுப்பறை வழக்கமான ஒன்றல்ல.

பல்வேறு பின்னணிகள் மற்றும் நம்பிக்கை முறைகளிலிருந்து வருகிற மாணவர்கள் அங்கு படிக்கிறார்கள். அட்வென்டிஸ்ட், கத்தோலிக்கர், கால்வினிஸ்ட், நாத்திகர், பௌத்தர், ஹரே கிருஷ்ணா எனப் பலதரப்பு மாணவர்கள் உள்ளனர். சிலர் மறுபிறவிபற்றியும் வெளிப்படையாகப் பேசுகிறார்கள். சிறப்புக் கல்வி தேவைப்படுகிற பல மாணவர்களும் உள்ளனர். இத்தகைய சூழல் சில ஆசிரியர்களைத் தயக்கமடையச் செய்யக்கூடும். ஆனால் மோனிகா இதைக் கண்டு கவலைப்படவில்லை.

"நீங்கள் அப்படியே முன்னேறிச் செல்லவேண்டும்" என்று கூறினார்.

வகுப்பு ஆசிரியையாக அவர் தனது பணியைத் தொடங்கியபோது, ஒரு முக்கிய சவாலை உணர்ந்தார்: அதாவது, வேதாகம வகுப்பு அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டும் என்றால், மாணவர்கள் முதலில் வேதாகமத்தை நம்பவேண்டும். எனவே பரிச்சயமான கதைகளுடன் தொடங்குவதற்குப் பதிலாக, கேள்விகளுடன் தொடங்கினார்.

வேதாகமம் தன்னை அதிகாரமுள்ளதெனச் சொல்லுவதற்கான காரணத்தையும், வேதாகமம் தன்னை ஒளி, உண்மை, ஜீவ வார்த்தை என்று விவரிப்பதற்கான காரணத்தையும் கிட்டத்தட்ட ஒரு மாதமாக மாணவர்களுக்கு நடத்தினார். மாணவர்கள் தினமும் தங்களுடைய வேதாகமங்களைத் திறந்து, வசனங்களை வாசித்து, வேதாகமம் தன்னைப்பற்றி என்ன சொல்கிறது என்பதை ஒப்பிட்டுப் பார்த்தனர்.

"நாங்கள் வேதாகமத்தைத் திறக்காத நாளே இருக்கக்கூடாது என்று முயற்சி செய்கிறோம். மேலும் நாங்கள் சொல்வது வேதாகமத்திலிருந்துதான் வருகிறது என்பதை எப்போதும் தெளிவாக விளக்குகிறோம்" என்று மோனிகா சொன்னார்.

அந்த அணுகுமுறையை அவர் கையாளவதற்கு அவரால் மறக்கவே முடியாத ஒரு தருணம்தான் காரணம்.

பள்ளியின் முதல் நாளில், அன்றைக்கான நிகழ்ச்சிகள் பற்றி அவர் சொல்லிக்கொண்டிருந்தபோது, ஒரு சிறுவன் தன் கையை உயர்த்தி, "நீங்கள் சபையை நம்பாமல் தேவனை மட்டும் நம்பமுடியுமா?" என்று கேட்டான்.

அது ஒரு சாதாரண கேள்வி அல்ல. வீட்டிற்குச் சென்று அதைப்பற்றி நீண்ட நேரம் யோசித்தார் மோனிகா. இறுதியாக, அதற்கு எப்படிப் பதிலளிக்கவேண்டும் என்பதைத் தெரிந்துகொண்டார்.

"ஆம், நான் பல ஆண்டுகளாக சபையை நம்புகிற ஒரு நபராகத்தான் இருந்தேன்" என்று அவனிடம் சொன்னார்.

அந்தப் பதில் இன்னும் ஆழமான ஒன்றிற்கு கதவைத் திறந்துவிட்டது.

சந்தேக உணர்வு எவ்வளவு தீவிரமானது என்பது மோனிகாவுக்கு நன்றாகப் புரியும், ஏனென்றால் அதைத் தன் வாழ்க்கையில் அனுபவித்திருக்கிறார். அவரது அப்பா மதத்தை பகிரங்கமாக ஏளனம் செய்கிற ஒரு நாத்திகவாதி. தன் அப்பாமீது இருந்த அன்பினால், அவரும் அப்பாவின் கருத்துகளையே ஏற்றுக்கொண்டார். பதின்ம வயதிலும், விசுவாசம் என்பது ஒரு மாயை என்றே நம்பினார்; ஆனால் ஒரு அமைதியான மாலைப்பொழுதில் எல்லாம் மாறியது.

தனது பதினாறாவது வயதில் ஓர் இரவில், தன் மேஜையில் தனியாக அமர்ந்திருந்தபோது, இந்த உலகத்தைப்பற்றியும் அது எப்படி இயங்குகிறது என்பதைப்பற்றியும் யோசிக்கத் தொடங்கினார். 'இது தானாகவே நடந்திருக்க முடியாது' என்பதை உணர்ந்தார். அந்த இருட்டில், தன் வாயால் முணுமுணுக்க ஆரம்பித்தார்; அதுதான் தன்னுடைய முதல் ஜெபம் என்று உணர்கிறார்: 'சர்வவல்லமையுள்ள ஒருவர் இருந்தால், அவர் தம்மை எனக்குக் காட்டட்டும்' என்பதே அந்த ஜெபம்.

அந்த ஜெபம் கதவைச் சற்றே திறந்து வைத்தது.

புத்தகங்கள், நட்புகள் மற்றும் எதிர்பாராத சந்திப்புகள் மூலமாக தேவன் கொஞ்சம் கொஞ்சமாகப் பதிலளித்தார். பிறகு முதன்முதலாக ஒரு வேதாகமத்தை வாங்கி, அதை வாசிக்காமல் ஒரு அலமாரியில் வைத்திருந்தார். பின்னர், போலந்தில் கம்யூனிஸ்ட் ஆட்சியின் இறுதி ஆண்டுகளில், விசுவாசத்தைத் தேடிக்கொண்டிருந்த நண்பர்கள் மூலமாக, கூட்டங்களில் கலந்துகொள்ளவும், கேள்விகள் கேட்கவும், வேதாகமத்தை திறந்து வாசிக்கவும் தொடங்கினார்.

சில பாதைகள் அவரைத் தவறான இடத்திற்கு வழிநடத்திச் சென்றன. சில பாதைகள் உண்மையோடு கலந்த தவறுகளை வெளிப்படுத்தின. ஆனால் வேதாகமத்தை நம்பலாம், மேலும் இயேசு உண்மையானவர் என்கிற விஷயம் தெளிவாகத் தெரிந்தது.

இறுதியில், மோனிகா வார்சாவில் நடந்த அட்வென்டிஸ்ட் நற்செய்தி கூட்டங்களில் கலந்துகொண்டார். தான் அறிந்திராத பல வேதாகமப் போதனைகளைக் கற்றுக்கொண்டார். இறுதியாக, மேல்நிலைப்பள்ளித் தேர்வுகள் முடிந்த உடனேயே, ஜூன் மாதத்தில் ஒரு நாளில் ஞானஸ்நானம் பெற்றார்.

அந்தப் பயணம் அவரது வாழ்க்கையை மாற்றியது. அது அவரது பாடம் நடத்துகிற முறையையும் வடிவமைக்கிறது.

"மாணவர்கள் கடினமான கேள்விகளைக் கேட்கும்போது, நான் பயப்படுவதில்லை, ஏனென்றால், நானும் அதே சூழ்நிலையைக் கடந்து வந்தவள்தான்" என்று கூறினார் மோனிகா.

இன்று, அவரது மாணவர்கள் பலர் அடிப்படையான வேதாகமத் கதைகள்கூடத் தெரியாமல் வருகிறார்கள். மோனிகா அந்தக் கதைகளை அவர்களுக்குச் சொல்கிறார்; வேதாகமத்தின்மீது நம்பிக்கையையும் உருவாக்குகிறார்.

## போலந்து



# புகலிடமாக மாறிய பள்ளி

*அந்தப் பள்ளியின் குணாதிசயத்தை விவரிக்கிற பல செயல்களில் இதுவும் ஒன்று.*

போர் காரணமாக ஷான்னாவும் விக்டரும் உக்ரைனில் இருந்த தங்கள் வீட்டை விட்டு தங்கள் பிள்ளைகளுடன் வெளியேறினர்; நம்பிக்கை மட்டுமே அவர்களிடம் எஞ்சியிருந்தது. போரிலிருந்து தப்பி ஓடுகிற பல குடும்பங்களைப்போல, எங்கு போய்ச் சேருவோம், அந்தப் பயணம் எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது தெரியாமலேயே அங்கே இருந்து வெளியேறினார்கள்.

ஆனால், ஷான்னாவுக்கு ஒரு விஷயம் தெளிவாகத் தெரிந்திருந்தது; தன் பிள்ளைகள் தொடர்ந்து அட்வென்டிஸ்ட் கல்வி கற்கவேண்டும் என்று விரும்பினார்.

உக்ரைனில் அட்வென்டிஸ்ட் பள்ளிகளுக்கு வலுவான அடித்தளம் உண்டு. அந்தக் குடும்பத்தினர் அங்கு தங்கள் மூன்று பிள்ளைகளும் விசுவாசத்தை மையமாகக் கொண்ட சூழலில் படித்துமுடிப்பார்களென நம்பியிருந்தார்கள். ஆனால், அட்வென்டிஸ்ட் பள்ளி மூடப்பட வாய்ப்பிருப்பதற்காக அவர்கள் ஒருபோதும் நினைத்திருக்கவே இல்லை. போரால் அப்பள்ளி மூடப்பட்டது. அகதிகளாக, அவர்களது எதிர்காலம் நிச்சயமற்றதாக இருந் தது, மேலும் அவர்கள் சொந்தமாக தேர்வுகள் செய்வதற்கும் குறைவாகவே வாய்ப்பிருந்தது.

அக்குடும்பத்தினர் போலந்து நாட்டைச் சென்றடைந்தபோது, ஒரு திருச்சபையின் வளாகத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டார்கள். அந்த வளாகத்தில்தான் சிறுவர்களுக்கான 'காம்பஸ்' அட்வென்டிஸ்ட் பள்ளியும் இருந்தது. அங்கு ஓர் அட்வென்டிஸ்ட் பாலர் பள்ளி

யும் ஆரம்பப்பள்ளியும் இருப்பதை ஷான்னா அறிந்த போது, அது தன் ஜெபத்திற்குக் கிடைத்த பதிலாக நம்பினார்.

ஆனால், அவர்களுக்கு மற்றொரு தடையும் இருந்தது. அது பணம்.

பல அகதி குடும்பங்களைப் போலவே, அந்கர் குடும்பத்தினரிடமும் பணச் சேமிப்பு எதுவுமில்லை. தனியார் பள்ளியில் கல்விக்கட்டணம் செலுத்துவது அவர்களுடைய வசதிக்கு அப்பாற்பட்டதாக இருந்தது. இருந்தாலும், ஷான்னா ஜெபித்தார். தன் பிள்ளைகளில் ஒருவராவது அந்தப் பள்ளியில் படிக்கவேண்டும் என்று ஏங்கினார்.

அவர்களுடைய கடைசிப் பிள்ளை மிகக்குறைந்த கட்டணத்தில் பாலர்பள்ளியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். ஷான்னா அதற்கு நன்றி உணர்வோடு இருந்தார். ஆனால், அரசுப் பள்ளிகளுக்குச் சென்று படிக்கவேண்டியிருந்த தனது மூத்தப் பிள்ளைகளை நினைத்து மிகவும் பாரமடைந்தார்.

தன்னால் இயன்ற பங்களிப்பைச் செய்யவேண்டும் என்பதில் உறுதியாக இருந்த ஷான்னா, வளாகத்திலுள்ள கட்டிடங்களைச் சுத்தம் செய்யும் வேலையைச் செய்ய ஆரம்பித்தார். விக்டர் பராமரிப்பு மற்றும் கட்டுமானத் திட்டங்களுக்கு உதவினார். தங்களுக்கு இதைவிட அதிகமாகக் கிடைக்கும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. எனவே, அவர்கள் உண்மையாக, அமைதியாக, நன்றியுணர்வுடன் உழைத்தனர்.

ஆனால், ஷான்னா தொடர்ந்து ஜெபித்து வந்தார்.

அவரது மிகப்பெரிய ஆசை தன் மகள் சோஃபியா அந்த அட்வென்டிஸ்ட் பள்ளியில் படிக்க வேண்டும் என்பதுதான். குடும்பத்தின் சூழ்நிலையை பள்ளி நிர்வாகிகள் அறிந்தபோது, அவர்கள் அதற்கு தீர்வுகாண முயன்றார்கள். அகதி குழந்தைகள் அட்வென்டிஸ்ட் கல்வியை விரும்புகிறார்கள், ஆனால் அதற்கான கட்டணத்தைச் செலுத்த அவர்களிடம் வசதி இல்லை என்பதை விளக்கி அட்வென்டிஸ்ட் சுயாதின சேவைகள் மற்றும் நிறுவனங்கள் அமைப்பிற்கு ஒரு கோரிக்கை அனுப்பப்பட்டது.

அதற்கு அவர்கள் எதிர்பார்த்திராத அளவுக்க தயாளமிக்க ஒரு பதில் கிடைத்தது

சோஃபியா ஒரு வருடம் முழுவதும் அந்தப் பள்ளியில் படிப்பதற்குத் தேவையான நிதி உதவி வழங்கப்பட்டது. இந்த கூடுதல் ஆதரவின்மூலம், கல்விக்கட்டணம் அந்தக் குடும்பத்தினரால் செலுத்தக்கூடிய அளவிற்குக் குறைக்கப்பட்டது. ‘தன் பிள்ளை இங்கே படிக்க வேண்டும் என்பதுதான் ஷான்னாவின் கனவாக இருந்தது’ என்று ஒரு ஆசிரியர் கூறினார்.

சோஃபியா பள்ளியில் சேர்ந்து நன்றாகப் படிக்க ஆரம்பித்தாள்.

தொடர்ந்து கிடைத்த ஆதரவால், இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, அந்தப் குடும்பத்தின் மூத்த மகனும் அங்கு சேர்ந்தார். இப்போது அந்தக் குடும்பத்தின் மூன்று பிள்ளைகளும் நம்பிக்கையும், இரக்கமும் ஒரு நல்ல

நோக்கமும் கொண்ட ஒரு சூழலில் கல்வி கற்று வந்தனர்.

சோஃபியாவிற்கு, பள்ளிக் கூடமானது வெறும் பாடம் நடத் தப்படுகிற, வீட்டுப்பாடம் செய்கிற ஒன்றைவிட, தன் சொந்த இடம் போலவே மாறியது.

ஒரு வருடம் சென்றது, நீச்சல் வகுப்புகளில் பங்கேற்க மாணவர் களுக்கு அழைப்பு கொடுக்கப்பட் டது. அது கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டிய ஒரு விருப்பப் பாடமா கும். சோஃபியா அதில் சேர விரும் பினாள், ஆனால் அவளது குடும் பத்தால் அதற்கான பணத்தைச் செலுத்த முடியவில்லை. இந்தச் சூழ் நிலையை அறிந்த ஒரு ஆசிரியர், யாருக்கும் தெரியாமல் சோஃபியா வின் ஒரு வருட நீச்சல் வகுப்புக் கான கட்டணத்தைத் தானே செலுத் தினார்.

இதற்காக எந்தவொரு அறி விப்பும் வெளியிடப்பட வில்லை. எந்தவொரு பாராட்டும் எதிர்பார்க் கப்படவில்லை. அது ஒரு எளிய இரக்கச் செயல்; அந்தப் பள்ளியின் குணாதிசயத்தை விவரிக்கிற பல செயல்களில் இதுவும் ஒன்று.

அந்தக் குடும்பத்தினர் போன்ற வர்களுக்கு, அட்வென்டிஸ்ட் கல்வி ஆடம்பரமான ஒரு விஷயமல்ல. அது அவர்களின் வாழ்க்கையின் இக்கட்டான காலத்தில் கிடைத்த ஒரு நிலையான ஆதரவு. எல்லாமே நிச்சயமற்றதாகத் தோன்றியபோது, அது அவர்களுக்கு ஆவிக்குரிய ரீதியில் ஒரு வலுவான அடித்தள மாக இருந்தது. தங்களின் சொந்த நாட்டை விட்டு வெளியேறிய போதி லும், தங்களை யாரும் மறந்துவிட வில்லை என்பதை அவர்களுக்கு அது நினைவூட்டியது.

அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த நஹூம், சோஃபியா மற்றும் நாதன் ஆகிய சிறுவர்கள் இன்று போலந்து மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த தங் கள் வகுப்புத் தோழர்களுடன் சேர்ந்து வளர்ந்து, கற்றுக்கொண்டு, சேவை செய்து வருகிறார்கள். வேதாகமத் தைப் படிக்கிறார்கள், வகுப்பறைக்கு வெளியே இயற்கையோடு சேர்ந்து கற்கிறார்கள், தங்கள் சமூகத்திற்குச் சேவை செய்கிறார்கள். மேலும், ஆவிக்குரிய வாழ்வை வெறும் நம் பிக்கையாக மட்டுமல்லாமல், ஒரு வாழ்வியல் முறையாகவும் அனுப விக்கிறார்கள்.

அவர்களின் கதை இதுபோன்ற பலரின் கதைகளில் ஒன்றாகும்.

ஷான்னாவின் ஜெபங்களுக் கான பதில் ஒரே நேரத்தில் கிடைக்க வில்லை. ஒரு பள்ளி, ஒரு சமூகம், தாராள மனம்படைத்த மனிதர்கள் மற்றும் நம் குறைகளைக் கேட்கும் தேவன் என படிப்படியாக அதற்கு பதில் கிடைத்தது. அந்தப் பிள்ளை களுக்கு அந்தப் பள்ளி அவர்கள் பாதுகாப்பாக உணருகிற ஒரு புக லிடமாக அமைந்தது.

காம்பஸ் பள்ளி வெறும் பள் ளிக்கூடம் மட்டுமல்ல. அது ஆதர வான ஒரு சூழலில் பிள்ளைகள் பாதுகாப்பாகக் கற்றுக்கொள்வதற் கும், வளர்வதற்கும் ஒரு இடமாகும். அங்கு அவர்கள் தேவனோடும், ஒரு வருக்கொருவரோடும் நெருக்கமாக வளருவதற்கு ஊக்குவிக்கப்படு கிறார்கள்.

## இங்கிலாந்து



# கதவுகளைத் திறக்கும் இசை

*இசை அவர்களுக்கு ஓர் ஒழுங்கையும் நம்பிக்கையையும் தந்தது.*

2014-ஆம் ஆண்டில், கிழக்கு லண்டனில் இசை நற்செய்தி பணித் திட்டம் ஒன்றை வழிநடத்துமாறு ஃபியோனாவிடம் முதலில் கேட்ட போது, அவர் தயங்கினார்.

தங்கள் பகுதிகளில் தாக்கத்தை ஏற்படுத்துகிற மையங்களை உருவாக்கும் விதம்குறித்து ஆலோசித்துக் கொண்டிருந்த கிழக்கு லண்டன் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் திருச்சபையின் தலைவர்கள்தாம் இந்த நற்செய்திபணித்திட்டம்பற்றி யோசித்தார்கள். ஆரோக்கியமும் கல்வியும் சம்பந்தப்பட்ட ஊழியத் திட்டம் முன்வைக்கப்பட்டது. பின்னர் ஒரு இசைப் பள்ளியைத் துவங்கலாமென ஒருவர் பரிந்துரைத்தார். பெரிய பாடகர் குழுக்கள் மற்றும் இசைக்குழுக்களை வழிநடத்திய ஃபியோனாவின் பணியை நன்கு அறிந்திருந்த போதகர் டேவிட் பர்னெட், ஃபியோனாவின் பெயரைப் பரிந்துரைத்தார். ஃபியோனா மெசியா என்கிற நிகழ்ச்சியை 25 ஆண்டுகள் நடத்தியிருக்கிறார்.

இந்த இசை நற்செய்திபணித் திட்டம் குறித்து முதலில் அவருக்கு முழு நிச்சயம் இருக்கவில்லை. “வடக்கு லண்டனில் இது போன்ற ஒன்றை நான் தொடங்க நினைத்தேன். ஆனால், அது சரியாக அமையவில்லை” என்று அவர் கூறினார்.

ஆனாலும், அவர் கிழக்கு லண்டனில்தான் வசித்ததால், நன்றாக ஜெபித்து, யோசித்து, அதற்கு ஒப்புக் கொண்டார்.

ஏப்ரல் 5, 2015 அன்று, ஹாக்னியின் லண்டன் பெருநகரப் பகுதியில் உள்ள கிளாப்டன் செவன்த்-டே அட்வென்டிஸ்ட் திருச்சபை

யில், கிழக்கு லண்டன் பாரம்பரிய இசைப் பள்ளி தொடங்கப்பட்டது. நான்கு ஆசிரியர்கள் மற்றும் சுமார் பத்து மாணவர்களுடன் அப்பள்ளி தொடங்கப்பட்டது. வாய்மொழித் தகவல் மற்றும் திருச்சபை அறிவிப்பு கள் மூலமாகவே புதிய மாணவர் கள் சேர்க்கப்பட்டனர்.

ஆரம்பத்திலிருந்தே, இந்தத் திட்டம் இரண்டு நோக்கங்களைக் கொண்டிருந்தது: அட்வென்டிஸ்ட் திருச்சபைக்குள் இசையை வலுப் படுத்துவது மற்றும் பொதுச் சமூகத் தைச் சென்றடைவது.

முதலில், உள்ளூர் சபைகளைச் சேர்ந்த மாணவர்களே பெரும்பா லும் அதில் சேர்ந்தார்கள். ஆனால் 2016 இல் ஒரு இணையதளம் தொடங்கப்பட்ட பிறகு, அட்வென் டிஸ்ட் அல்லாத பல குடும்பத்தின ரும் தங்கள் பிள்ளைகளை அங்கு சேர்க்கத் தொடங்கினர். பின்னர் வந்த பெருந்தொற்று எல்லாவற்றை யும் மாற்றியது.

பல திட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டபோதும், அந்த இசைப் பள்ளி தொடர்ந்து இயங்கியது. தக வல் தொழில்நுட்ப வல்லுநரான ஒரு பெற்றோர், கூகுள் கிளாஸ்ரூம் வசதியை ஏற்படுத்த உதவினார். இதன்மூலம் மாணவர்கள் தங்கள் இசை கருத்தியல் வேலைகளைச் சமர்ப்பிக்கவும், ஆன்லைனில் பாடங் களைப் படிக்கவும் ஏற்பாடு செய்ய முடிந்தது. சுமார் பாதி மாணவர்கள் இந்தப் புதிய முறைக்குத் தங்களை மாற்றிக்கொண்டனர். “பிள்ளைகள் ஒன்றுமே செய்யாமல் இருப்பதை நாங்கள் விரும்பவில்லை. இசை அவர்களுக்கு ஓர் ஒழுங்கையும் நம்பிக்கையையும் தந்தது” என்று ஃபியோனா விளக்கினார்.

அதே காலக்கட்டத்தில், திருச் சபை கட்டிடத்தில் மற்றொரு சமூக சேவைத்திட்டமும் செயல்பட்டு வந் தது; அதுதான் ‘இ5 பேபி பேங்க்’. இது வாழ்வாதாரத்திற்குப் போரா டிக் கொண்டிருந்த 300 க்கும் மேற் பட்ட குடும்பங்களுக்கு உணவும் உடையும் அத்தியாவசியப் பொருட் களும் வழங்கி உதவுகிற ஒரு திட் டம். அந்தக் குடும்பத்தினர் இதன் கட்டிடத்திற்குள் நுழையும்போது, பாரம்பரிய இசை அங்கிருந்த மண்ட பத்தில் மென்மையாக ஒலிப்பதைக் கேட்டனர்.

“பாரம்பரிய இசைக்கு குணப் படுத்தும் ஒரு ஆற்றல் உண்டு. பெற் றோர்கள் அந்த இசையைப்பற்றி ஆவலுடன் விசாரிப்பார்கள்” என்று ஃபியோனா கூறினார்.

இதனைத் தொடர்ந்து, சமூக நலச் சேவை அமைப்புகளும், மன நல ஆதரவு அமைப்புகளும் மற்றும் குடும்ப ஆதரவு அமைப்புகளும் இந்தப் பள்ளியை மக்களிடம் பரிந் துரைக்க ஆரம்பித்தன. பேபி பேங்க் மூலமாகப் பரிந்துரைக்கப்பட்ட பல சிறுவர்களை, குறிப்பாக அகதிகள் அல்லது பின்தங்கிய பின்னணியைச் சேர்ந்த பல சிறுவர்களை ஃபியோ னா தனிப்பட்ட முறையில் பள்ளி யில் சேர்த்துக்கொண்டார்.

2021 ஆம் ஆண்டில், இஎல் எஸ்ஓஎம் ***(ELSOM)*** என்கிற அந்த இசைப்பள்ளி ஒரு தொண்டு நிறு வனமாக பதிவு செய்யப்பட்டது. இது நலிவடைந்த குடும்பங்களுக்கு

பாரம்பரிய இசைப்பயிற்சியை வழங்குவதற்கான அதன் நற்செய்திப் பணியை முறைப்படி வலுப்படுத்தியது. தென் இங்கிலாந்து கான்ஃபரன்ஸ், பிரிட்டிஷ் யூனியன் கான்ஃபரன்ஸ் மற்றும் வெளி நிதி உதவி அமைப்புகளிடமிருந்து கிடைத்த மானியங்கள், மாணவர்களின் கல்விக்கட்டணத்தைக் குறைக்க உதவின.

இன்று, இந்தப் பள்ளி 10 மாணவர்களில்இருந்து150மாணவர்களாக வளர்ந்துள்ளது. இப்போது பன்னிரண்டு ஆசிரியர்கள் நேரடியாகவும் இணையவழியாகவும் பாடம் கற்பிக்கிறார்கள். கிழக்கு லண்டனிலிருந்து மட்டுமல்லாமல் வேல்ஸ், ஸ்காட்லாந்து மற்றும் பிற பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் இதில் இணைந்துள்ளனர்.

இந்தப் பள்ளியின் மிகப்பெரிய சாதனைகளில் ஒன்று 2024 இல் நிகழ்ந்தது. எட்டு முதல் பத்தொன்பது வயது வரையிலான சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான 17 வார கால இசைக்குழு திட்டத்திற்காக ஆர்ட்ஸ் கவுன்சில் 10,000 பிரிட்டிஷ் பவுண்டுகளை நிதியாக வழங்கியது. இதில் ஐம்பத்து மூன்று இளைஞர்கள் பங்கேற்றனர். இதனைத் தொடர்ந்து இரண்டு இசை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன: ஒன்று கிளாப்டன் செவந்த்-டே அட்வென்டிஸ்ட்திருச்சபையிலும்,மற்றொன்று ராயல் காலேஜ் ஆஃப் மியூசிக்கிலும் நடைபெற்றன.

ஏப்ரல் 2025 இல், இஎல்எஸ் ஓஎம் தனது பத்தாவது ஆண்டு விழாவை ஒரு வார கால சிறப்பு நிகழ்ச்சிகளுடன் கொண்டாடியது. இங்கிலாந்து ராஜகுடும்பத்தைச் சேர்ந்த க்ளௌசெஸ்டர் நகரின் இளவரசி கிளாப்டன் திருச்சபைக்கு நேரில் வருகை தந்தது இந்நிகழ்ச்சியின் மிக முக்கிய சிறப்பம்சமாக அமைந்தது. அவர் இருபது நிமிட இசைக்குழு நிகழ்ச்சியைக் கேட்டு ரசித்ததோடு, மாணவர்களுடன் ஒரு மணி நேரம் கலந்துரையாடினார்.

மறுபுறம், திரைமறைவில் பல்வேறு அமைப்பினர் கூட்டு சேர்ந்து வருகின்றனர். ‘நியூக்ளியோ’ என்கிற அமைப்புடனான தொடர்பின் மூலம், வயலின்கள், வயோலாக்கள், புல்லாங்குழல்கள், காற்று ஊது கருவிகள், கீபோர்டுகள் ***(keyboards)*** மற்றும் ஒரு வெள்ளைநிற மிகப் பெரிய வயலின் வகை இசைக் கருவி உட்பட முப்பதிற்கும் மேற்பட்ட இசைக் கருவிகள் இஎல்எஸ்ஓஎம் பள்ளிக்கு நன்கொடையாகக் கிடைத்துள்ளன. சுபியோனாவின் உறவினர் ஒருவர், டிம்பானி இசைக் கருவிகளின் முழுத் தொகுப்பையும் நீண்ட கால கடனுதவியாகப் பெற்றுத் தந்து உதவினார். இது ஒவ்வொருஇசைநிகழ்ச்சியின்போதும் அந்தத் தொண்டு நிறுவனம் வாடகைக்கு எடுப்பதால் செலவாகும் நூற்றுக்கணக்கான பவுண்டுகளை மிச்சப்படுத்தியது.

“தற்போது, எனது வரவேற்பறை ஒரு இசைக் கருவிகளின் கிடங்குபோலக் காட்சியளிக்கிறது” என்று ஃபியோனா சிரித்தவாறே கூறுகிறார். ஆனால், இடநெருக்கடிதான் இப்போது இந்தப் பள்ளியின் மிகப் பெரிய தடையாக மாறியுள்ளது.

இங்கிலாந்து



# இசையையும் தாண்டி

*ஆனால் கீரோனைப் பொறுத்த வரை, இசை என்பது வெறும் இசைக்குறிப்புகள் சார்ந்தது மட்டுமல்ல.*

கீரோன் முதன்முதலாக வயலினை தன் கையில் எடுத்தபோது, அவனுக்கு நான்கு வயது. அப்போதெல்லாம் வயலின்மீது அவனுக்கு பெரிய விருப்பம் எதுவுமில்லை.

அவனது மூத்த அண்ணன் ஏற்கனவே இசை வகுப்புகளுக்குச் செல்லத் தொடங்கியிருந்தார், மேலும் அவர்களுடைய அம்மா, ‘‘நீ வயலின் வாசிக்கப் போகிறாய் என்றால், அதைச் சரியாக வாசிக்க வேண்டும்’’ என்று சொல்லுவதுண்டு.

கீரோனும் அப்படியே செய்தான்.

லண்டனில் பிறந்த அவன், 2019 இல் மீண்டும் இங்கிலாந்திற்குத் திரும்புவதற்கு முன்பு வரை, பதினேழு ஆண்டுகள் கிரெனடா நாட்டில் வளர்ந்தான். இந்த இட மாற்றம் தனது மகன்களுக்கு நல் வாய்ப்புகள் கிடைக்க உதவும் என்று அவனது அம்மா நம்பினார். ‘‘நாங்கள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் முடங்கிப் போவதை அவர் விரும்பவில்லை. நாங்கள் இன்னும் பலவற்றை அனுபவித்து வளர வேண்டும் என்று அவர் விரும்பினார்‘ என்று அவன் கூறினான்.

இசை அதற்கான ஒரு பாதையாக மாறியது.

கீரோன் பதிமூன்று வயதிற்குள், ஃபியானோ மற்றும் வயலின் கற்றுக்கொடுக்கத் தொடங்கியிருந்தான். அவன் இசைப்பயிற்சிகளை வழிநடத்தினான், இசைக் குழுக்களுக்குப் பயிற்சியளித்தான், மேலும் ஒழுக்கத்திலும் திறமையிலும் சிறந்து விளங்கினான். ‘‘எனது குழுவி

லேயே நான்தான் அதிக மதிப்பெண்களைப் பெற்றிருந்தேன், அதிக அர்ப்பணிப்புடனும் இருந்தேன்'' என்று கூறினான். பொறுப்பு அவனுக்கு இயல்பாகவே வந்தது.

அவன் மீண்டும் லண்டனுக்குத் திரும்பியபோது, கிழக்கு லண்டன் பாரம்பரிய இசைப் பள்ளியின் இயக்கனரான ஃபியோனாவைத் தொடர்புகொண்டான். அவனது அண்ணன்சில ஆண்டுகளுக்குமுன் அங்கு படித்திருந்ததால், அவருக்கு அந்தப் பள்ளியின் இயக்குனரை நன்றாகத் தெரிந்திருந்தது. ஃபியோனாவை தொலைபேசியில் அழைத்து, அங்கு ஏதேனும் வேலை இருக்கிறதா என்று சாதாரணமாகக் கேட்டான்.

வேலை இருந்தது, இசைகோட்பாடுகளைக் கற்றுக்கொடுக்க ஒரு ஆசிரியர் தேவைப்பட்டார்.

இசைக் கோட்பாடு மிகவும் இன்றியமையாத ஒன்று என்று உறுதியாகக் கூறுகிறான். ''அது ஒரு மொழியைக் கற்றுக்கொள்வதைப் போன்றது. உங்களுக்கு பிரெஞ்சு மொழி பேசத் தெரிந்தும், அதை எழுதவோ படிக்கவோ தெரியாவிட்டால் அதில் எந்தப் பயனும் இல்லை. இசையும் அப்படித்தான்; நீங்கள் அதைமுழுமையாகப்புரிந்துகொள்ள வேண்டும்'' என்றான்.

அந்தப் புரிதல்தான் அவனது முழு வாழ்க்கையையும் வடிவமைத்துள்ளது. இன்று, 27 வயதாகும் கீரோன் ஏழு இசைக் கருவிகளை வாசிக்கிறான்: வயலின், வயோலா, செலோ, டபுள் பேஸ் எனப்படும் வயலின்போன்ற பெரிய இசைக் கருவி, பியானோ, பேஸ் கிட்டார் மற்றும் கிளாரினெட் போன்ற இசைக் கருவிகளை இசைக் கிறான். இசைக் கோட்பாட்டை வலுவாக அறிந்திருப்பதால், இந்தக் கருவிகள் அனைத்தையும் தன்னம்பிக்கையுடன் அவனால் வாசிக்கமுடிகிறது.

''இசையை வாசிப்பது எளிது, ஆனால், அதை எப்போதும் முழுமையாகப் புரிந்துகொள்வது எளிதல்ல'' என்று கூறினான்.

அந்த இசைப்பள்ளியில், அவனது பொறுப்பு இன்னும் அதிகரித்துள்ளது. இசைக் கோட்பாட்டைக் கற்பிப் பதில் தொடங்கிய அவனது பணி, பின்னர் இசைக் குழுவின் கம்பிகள் கொண்ட இசைக் கருவிகள் பிரிவை வழிநடத்துகிற அளவிற்கு வளர்ந்தது. இறுதியில், அவர் உதவி இசை இயக்குநராகப் பொறுப்பேற்றார். அவர் இசைப்பட்டியலைத் திட்டமிடுகிறார், தனிப்பிரிவுப் பயிற்சிகளை நடத்துகிறார், தேவைப்படும்போது முழு இசைக் குழுவையும் முன்னின்று வழிநடத்துகிறார், மேலும் இளம் இசைக் கலைஞர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் விளங்குகிறார்.

சுமார் 75 மாணவர்கள் அவரது வழிகாட்டுதலின்கீழ் படித்து வருகிறார்கள். கம்பிகள் கொண்ட இசைக் கருவிகள் பிரிவில் மட்டுமே 20 க்கும் மேற்பட்ட கலைஞர்கள் இருக்கிறார்கள்.

ஆனால் கீரோனைப் பொறுத்தவரை, இசை என்பது வெறும் இசைக் குறிப்புகள் சார்ந்தது மட்டுமல்ல.

''முதலில் இங்கு வந்தபோது வாயே திறக்காத சில மாணவர்கள்

எனக்கு இருந்தார்கள், இப்போது அவர்கள் மிகுந்த தன்னம்பிக்கை யுள்ளவர்களாக, தங்கள் கருத்துக் களைத் தெளிவாக வெளிப்படுத்து கிற திறனுள்ளவர்களாக விளங்கு கிறார்கள். இது இசைபற்றியது மட்டுமல்ல; இது ஒரு நல்லுறவை உருவாக்குவது பற்றியது'' என்று சொன்னார்.

இசை ஒருவரது குணத்தை வெளிப்படுத்துகிறது என்று நம்பு கிறார்.

''ஒரு பிள்ளை பயந்த சுபாவம் கொண்டதாக இருந்தால், அது இசை இசைப்பதைக் கேட்டே அதைக் கண்டுபிடித்துவிடலாம். அவர்கள் கவனக்குறைவாக இருந்தாலும் தெரியும். அவர்கள் விடா முயற்சி உடையவர்களாக இருந்தால், அது வும் இசையில் வெளிப்படும். இசை ஒருவரது ஆளுமையைப் பெரிதாக் கிக் காட்டுகிறது; அதிலிருந்து நீங் கள் தப்பவே முடியாது'' என்றார்.

அந்த நேர்மை அவரையும் செதுக்கியது. சிறுவனாக இருந்த போது, ஏதேனும் தவறு நேர்ந்தால் ஏற்படும் ஏமாற்றத்தினால் அவர் சில சமயங்களில் பியானோவை அடிப்பதுண்டு. அவரது தாய் அவ ரிடம் நிதானமாக, ''உன் கோபத் தைக் குறைத்துக்கொண்டு பொறு மையைக் கற்றுக்கொள்'' என்று கூறு வார்.

இசை அவருக்கு ஒரு கண் ணாடியாக மாறியது.

''ஒரு குறிப்பிட்ட இசைப் பகுதியை வாசிக்க நீங்கள் சிரமப் படும்போது, ஒரு கேள்வியைக் கேட்க வேண்டும்: தவறு இசையிலா அல்லது என்னிடமா? என்று சிந் திக்க வேண்டும். சில நேரங்களில் அது உங்களது ஆளுமை சார்ந்த விஷயமாக மட்டுமே இருக்கும்'' என விவரித்தார்.

கடந்த சில ஆண்டுகளில், அவ ரது முன்னாள் மாணவர்கள் லண்ட னில் உள்ள ராயல் ஆல்பர்ட் போன்ற புகழ்பெற்ற இடங்களில் இசைப்ப தையும், தொழில்முறை இசைப் பதிவு வாய்ப்புகளைப் பெறுவதை யும் பார்த்திருக்கிறார். அவர்களின் இந்த வளர்ச்சியைப் பார்ப்பது அவ ருக்கு மிகுந்த மனநிறைவைத் தரு கிறது.

''பாரம்பரியமும் நாம் விட்டுச் செல்லும் நற்பெயரும் மிகவும் முக் கியமானது, அது நான் இங்கு வாழ்ந் தேன், நான் ஒரு நல்ல அடையாளத் தை விட்டுச் சென்றிருக்கிறேன் என்று சொல்வதற்கான ஒரு வழியாகும்''.

அவரது ஆவிக்குரிய நம்பிக்கை அவரது இசையுடன் பிணைந்துள் ளது. 'வாரும் ஆசீர்வாத ஜீவ ஊற் றே', 'என் ஆத்துமா நலமாய் உள் ளதே', மற்றும் 'நீர் உண்மையுள்ள வர்' ஆகியவை அவருக்கு மிகவும் பிடித்த ஆவிக்குரியப் பாடல்களா கும். கைகளின் திறமையை இசை நுட்பங்கள் செதுக்குவதுபோல, ஒரு வரது இதயத்தை இத்தகைய பரிசுத்த இசை செதுக்குகிறது என்று அவர் நம்புகிறார்.

இஎல்எஸ்ஓஎம் எனப்படும் அந்த இசைப்பள்ளியில், மாணவர் களிடம் தன்னம்பிக்கை உருவாவ தையும், ஒழுக்கம் வளர்வதையும், ஆவிக்குரிய நம்பிக்கை வலுப்படு வதையும் காண்கிறார்.

## 13-வது ஓய்வுநாள்



# சேவைக்கே அர்ப்பணிப்பு

*“தேவனைப் பிரதிபலிக்காத பாடல்களை நாங்கள் வாசிப்பதற்கு வழியே இல்லை” என்றார் யெரோன்.*

ஏறக்குறைய ஏழு ஆண்டுகளுக்கு முன்பு, ஈஸ்ட் லண்டன் ஸ்கூல் ஆஃப் கிளாசிக்கல் மியூசிக் ***(ELSOM)*** அமைப்பில் யெரோன் முதன்முதலில் சேர்ந்தபோது, வயலின்மட்டுமே கற்றுக்கொள்ள விரும்பினார். இசையை முறையாகக் கற்றுக்கொள்வது தன்னுடைய திறமையில் மட்டுமல்ல, தன்னுடைய விசுவாசத்திலும் தாக்கத்தை உண்டாக்கும் என்பதை அப்போது அவர் உணரவில்லை.

முதலாவது வயலின் கற்றார். கடந்த ஆண்டு டரம்பெட் வாசிப்பதற்குக் கற்றுக்கொண்டார். இசைக் கருவிகளை வாசிக்கக் கற்றுக்கொள்வதுடன், இசைக் கோட்பாட்டையும் படித்து வருகிறார். இதன்மூலம் தாள ஞானத்தையும், இசைக் கோர்வைகளை ஆய்வு செய்தல், இசையின் கட்டமைப்பு மற்றும் இணக்கத்தைப் புரிந்துகொள்தல் போன்றவற்றையும் கற்றுக்கொள்கிறார்.

“சில நேரங்கள் சவால்களாக இருக்கும். இசைக்கோட்பாடு தெரிந்திருந்தாலும்கூட, அதை நடைமுறையில் பயன்படுத்த அறிந்திருக்கவேண்டும்” என்று சொல்கிறார்.

இசைக்கு அப்பாற்பட்ட விஷயங்களுக்கும் அந்தப் பாடம் பொருந்தும் என்று ஒப்புக்கொள்கிறார்.

தற்போது லண்டன் மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழகத்தில் வணிகவியல் படித்து வரும் பல்கலைக்கழக மாணவரான யெரோன், டோட்டன்ஹாமில் உள்ள தனது திருச்சபையில் உண்மையுடன் பணியாற்றி வருகிறார். அவருடைய சகோதரர் பியானோ வாசிக்கிறார். யெரோன் வயலின் வாசிக்கிறார். இரு

வரும் இணைந்து ஆராதனைகளில் இசை பிரிவைக் கவனித்துக்கொள் கிறார்கள்.

“தேவனுக்குச் சேவை செய்ய நாங்கள் எங்களை திருச்சபைக்கு அர்ப்பணித்துள்ளோம்” என்று கூறி னார்.

அவர் ஒரு கிறிஸ்தவக் குடும் பத்தில் வளர்ந்தவர், இசையை வெறும் பொழுதுபோக்காக மட்டும் அவர் கருதியதில்லை. எத்தியோப் பியாவில் இருந்தபோது, அவரது அம்மா தன் இளவயதில் பாடி யிருக்கிறார், எப்போதும் ஒழுக் கத்தையும் அர்ப்பணிப்பையும் வலி யுறுத்துவார். அவருடைய அப்பா வுக்கும் பாமாலைகள் மிகவும் பிடிக்கும், குறிப்பாக கிறிஸ்துவின் வருகையை அறிவிக்கிற பாடல்கள் அவருக்கு மிகவும் பிடிக்கும். வெள் ளிக்கிழமை மாலை வேளைகளில், குடும்பத்தினர் அனைவரும் ஆரா தனைக்காக ஒன்றுகூடி, இசைக் கருவிகளைச் சேர்ந்து வாசித்து, ஒன் றாகப் பாடி, ஜெபிக்கிறார்கள்.

அந்த ஒழுங்குகள் அவருக் குள் ஒரு நிச்சயத்தை உண்டாக்கின.

ஈஸ்ட் லண்டன் ஸ்கூல் ஆஃப் கிளாசிக்கல் மியூசிக் அமைப்பு, யெரோன் ஒருபோதும் எதிர்பாராத பல நல்வாய்ப்புகளை அவருக்கு வழங்கியது. அவர் லண்டன் முழு வதும் உள்ள திருச்சபைகளில் இசை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார், லண்டனின் மையப்பகுதியில் நடை பெற்ற இசைக்குழு கச்சேரிகளில் பங்கேற்றுள்ளார், மேலும் இந்த அமைப்பின் பத்தாம் ஆண்டு நிறைவு விழாவின் போது க்ளௌ செஸ்டருடைய இளவரசியின் முன் னிலையிலும் வயலின் வாசித்துள் ளார்.

“அது ஒரு மிகப்பெரிய தரு ணம், ஆனால், நாம் வாசிக்கும் பாடல்கள் எப்போதும் தேவனைப் போற்றுவதாக அமைந்திருப்பதுதான் எல்லாவற்றையும் விடச் சிறந்த விஷயம்” என்று கூறினார்.

அவருடைய வயலின் ஆசிரி யர், கிறிஸ்தவ ஒழுக்கங்களைப் பிரதிபலிக்கிற இசைப்பாடல்களை மட்டுமே மிகவும் கவனமாகத் தேர்வு செய்கிறார். இவர்கள் நடத்துகிற கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளில் எல் லாம் கிறிஸ்துவின் பிறப்பைக் கொண் டாடுகிற பாமாலைகளே முற்றிலும் நிறைந்திருக்கும். பக்தியூட்டுகிற இசையை பெயருக்காக அவர்கள் சேர்ப்பதில்லை; அதையே மைய மாகச் சேர்க்கிறார்கள்.

“இது தேவன்மீதான என் விசு வாசத்தில் மிகப்பெரிய நேர்மறை யானதாக்கத்தைஏற்படுத்தியுள்ளது, தேவனைப் பிரதிபலிக்காத பாடல் களை நாங்கள் வாசிப்பதற்கு வழி யே இல்லை” என்று யெரோன் கூறி னார்.

ஆனாலும், இசைத்திறன் தேர்வு கள் அச்சமூட்டுவதாக இருக்கலாம். ட்ரினிட்டி கல்லூரியிலிருந்து வரு கிற வெளித் தேர்வாளர்கள் ஒவ் வொரு மாணவரையும் மதிப்பிடு கிறார்கள். அதிகப்பட்ச தரநிலைக ளின் அடிப்படையில் தேர்வு நடத்தப் படும், மேலும் மாணவர்கள் மிகச் சிறந்த மதிப்பெண்களைப் பெறு வார்கள் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

“ஆரம்பத்தில் இது பயமாகத் தான் இருக்கும், ஆனால் போகப் போக இது எளிதாகிவிடும்” என்று ஒப்புக்கொண்டார்.

யெரோன் இசையின் மூலம், விடாமுயற்சியைக் கற்றுக்கொண் டார்; பொது மக்கள் முன்னிலையில் வாசிப்பதன் மூலம், தன்னம்பிக்கை யைப் பெற்றார்; வேதாகம இசைப் பாடல்களின் மூலம், ஆவிக்குரிய அர்ப்பணிப்பைப் பெற்றார்.

இசை எவ்வாறு ஒருவருடைய குணாதிசயத்தை உருவாக்குகிறது என்பதையும் அவர் கண்டுள்ளார். பயிற்சியில் காட்டுகிற ஒழுக்கம், அவரது அன்றாட வாழ்க்கையின் ஒழுக்கமாகவும் மாறுகிறது. நுணுக் கமான விஷயங்களில் காட்டுகிற கவனம், பொறுப்புணர்வை வளர்க் கிறது. ஒரு பெரிய இசைக்குழு வோடு இணைந்து பணியாற்றுவது, ஒத்துழைப்பையும் பணிவையும் கற்றுக்கொடுக்கிறது.

“இசையில், உங்களால் எதை யும் மறைக்க முடியாது, மற்ற அனை வரும் வெற்றி பெறவேண்டுமானால், நீங்கள் உங்கள் பகுதியைச் சிறப் பாகச் செய்யவேண்டும்” என்று விளக்கினார்.

லண்டன் போன்ற மிகப்பெரிய, பரபரப்பான ஒரு நகரத்தில், கவனச் சிதறல்களும் அழுத்தங்களும் தொடர்ந்து இருக்கிற சூழலில், எல் சாம் *(ELSOM)* அமைப்புநிலையான, அர்த்தமுள்ள ஒன்றை உருவாக்கு கிறது: அதாவது, சிறந்த தரத்திலும், விசுவாசத்தின் அடிப்படையிலும் அமைந்த ஒரு சமூகத்தை உருவாக் குகிறது.

இன்று, யெரோன் இசையை வெறும் திறமையாக மட்டும் பார்க் காமல், இறைவனுக்கான ஒரு ஊழி யமாகப் பார்க்கிறார்.

“எல்சாம் அற்புதமான ஓர் அமைப்பு என்று நினைக்கிறேன், மாணவர்கள் இங்கு நிறைய கற்றுக் கொள்கிறார்கள். கடினமான சூழ் நிலைகளைக் கடந்துசெல்ல ஆசிரி யர்கள் உதவுகிறார்கள். மேலும் நாங்கள் கற்றுக்கொண்டதை தேவ னுக்குச்சேவை செய்யப்பயன்படுத் துகிறோம்” என்று கூறினார்.

சிறந்த தரம், ஒழுக்கம், மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாகக் கிறிஸ் துவுக்கான அவரது அர்ப்பணிப்பு தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

விசுவாசமும் சமுதாயமும் இணைந்து செயல்படும்போது, யெரோன் போன்ற இளைஞர்கள் மேலும் பலமடைகிறார்கள்.

இந்தப் பதின்மூன்றாவது ஓய்வு நாள் அன்று, இங்கிலாந்தில் எல் சாம் போன்ற ஒரு பள்ளியில் படிக்க வாய்ப்பில்லாத, ஆனால் தங்களை அரவணைக்க யாராவது தேவைப் படுகிற சிறுவர்களுக்கு நீங்கள் உத வலாம். கவலையுடனும், தனிமையு டனும், அல்லது பயத்துடனும் இருக் கும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு ‘சேஃப்ஸ் பேஸ்2பி’ என்று சொல்லப் படுகிற அமைப்பை உருவாக்க இந் தக் காலாண்டின் காணிக்கை உத வும். அத்துடன், டிரான்ஸ் - ஐரோப் பிய டிவிஷனில் உள்ள பின்வரும் மூன்று திட்டங்களுக்கும் இந்த காணிக்கை வழங்கப்படும்: பின் லாந்தின் ஹெல்சின்கி நகரில், ஒய் கோஸ் எனப்படும் ஒரு குடும்ப ஊழி

யப்பணி மையத்தைத் துவங்குதல்; போலந்தில் காம்பஸ் எனப்படும் முதல் அட்வென்டிஸ்ட் ஆரம்பப் பள்ளியை விரிவாக்கம் செய்தல்; குரோஷியாவின் சாகிரேப் நகரில் உள்ள செவந்த்-டே அட்வென்டிஸ்ட் ஆலயக் கட்டிடத்தை மீண்டும் கட்டி யெழுப்புதல். இந்த ஓய்வுநாளில் பதின்மூன்றாவது ஓய்வுநாள் காணிக் கையை தாராளமாக வழங்குவதற்கு உங்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்!

## கதைக் குறிப்புகள்

- வரைபடத்தில் ஐக்கிய ராச்சியம் இருக்கிற இடத்தையும் காட்டுங்கள்.
- இந்தக் கதைக்கான புகைப்படங்களை முகநூல் பக்கத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய: ***bit.ly/fb-mq.***
- பிரிட்டிஷ் யூனியன் கான்ஃபரன்ஸ் 1903 ஆம் ஆண்டில் 1,160 உறுப்பினர்களுடன் தொடங்கப்பட்டது.
- பிரிட்டனில் ஏழு அட்வென்டிஸ்ட் பள்ளிகள் உள்ளன: நியூபோல்ட் உயர் கல்விக் கல்லூரி, ஸ்டான்பரோ பார்க் மேல்நிலைப்பள்ளி, ஸ்டான்பரோ பார்க் ஆரம்பப் பள்ளி, நியூபோல்ட் பள்ளி, ஹைலேண்ட் ஹவுஸ் பள்ளி, ஹார்பர்பெல் பள்ளி மற்றும் ஃப்ளீட்வுட் பள்ளி.
- பிரிட்டனின் அதிகாரப்பூர்வ மொழி ஆங்கிலம் ஆகும். ஆனாலும், ஸ்காட்ஸ், அல்ஸ்டர் ஸ்காட்ஸ், ஸ்காட்டிஷ் கேலிக், வெல்ஷ், கார்னிஷ் மற்றும் ஐரிஷ் உள்ளிட்ட பிராந்திய மொழிகளும் அங்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- இங்கிலாந்து மற்றும் ஸ்காட்லாந்து ராஜ்ஜியங்கள் ஒன்றிணைந்த போது, 1707 ஆம் ஆண்டின் ஒன்றியச் சட்டங்களின்படி 'கிரேட் பிரிட்டன் ராச்சியம்' உருவாக்கப்பட்டது.
- 1800 ஆம் ஆண்டில், மற்றொரு ஒன்றியச் சட்டத்தின் மூலம் அயர்லாந்து ராச்சியத்துடன் கிரேட் பிரிட்டன் இணைக்கப்பட்டது. அயர்லாந்து தீவின் பெரும்பகுதி தற்போது ஒரு சுதந்திர நாடாக மாறிவிட்ட போதிலும், அதன் வடக்குப் பகுதி (வடக்கு அயர்லாந்து) இன்னும் ஐக்கிய ராச்சியத்தின் ஒரு பகுதியாகவே நீடிக்கிறது.
- ஐக்கிய ராச்சித்தை ஐரோப்பாவின் பிற பகுதிகளிலிருந்து பிரிக்கும் நீர்நிலைப் பகுதி ஆங்கிலக் கால்வாய் என்றும், அயர்லாந்திற்கும் பிரிட்டனின் பிற பகுதிகளுக்கும் இடையே உள்ள நீர்நிலைப் பகுதி ஐரிஷ் கடல் என்றும் அழைக்கப்படுகிறது.

நீங்கள் உதாரத்துவமாகக் கொடுத்த பதின்மூன்றா வார ஓய்வுநாள் காணிக்கைக்காக நன்றி. 2017ம் வருடத்தின் முதல் காலாண்டின் காணிக்கையால் குரோஷியாவின் மருஸெவெக் நகரில் ஆடவருக்கான ஒரு தங்கும் விடுதி கட்டப்பட்டது. இந்தக் காலாண்டில் சாகிரேப் நகரில் பிரிலாஸ் செவந்த்-டே அட்வென்டிஸ்ட் ஆலயத்தை மீண்டும் கட்டுவதற்கு காணிக்கை பயன்படும். காணிக்கை மூலம் குரோஷியாவிலுள்ள உங்கள் சகோதர சகோதரிகளுக்காக உதவி செய்வதற்கு நன்றி.







# அடுத்த காலாண்டுத் திட்டங்கள்

**அடுத்த காலாண்டில் மேற்கு – மத்திய ஆப்ரிக்க டிவிஷனில்னிலுள்ள திட்டங்களுக்கு காணிக்கை பயன்படும். அதன் சிறப்புத் திட்டங்கள்:**

- கோட் டி ஐவரி அல்லது ஐவரி கோஸ்ட்டின் அபிஜானில் உள்ள பிரின்ஸ் இம்மானுவேல் சர்வதேச அகாடமியில் ஒரு நல்செல்வாக்கு மையத்தை நிறுவுதல்
- கேப் வெர்டேயில் உள்ள பிரையா எனும் இடத்தில் ஒரு சுகாதார மருத்துவமனையைக் கட்டுதல்
- எக்குவடோரியல் கினியாவில் பாட்டா எனும் இடத்தில் பிரின்ஸ் இம்மானுவேல் குழந்தைகள் பள்ளியைக் கட்டுதல்

## 13-வது ஓய்வுநாளுக்கு முன்

- நம்முடைய ஊழியக் காணிக்கைகள் உலகம் முழுவதும் தேவனுடைய வார்த்தையைப் பரப்புவதற்குப் பயன்படுக்கின்றன என்பதையும், நம்முடைய பதின்மூன்றாவது ஓய்வு நாள் காணிக்கையில் நான்கில் ஒரு பங்கு (இது காலாண்டு ஊழியத்திட்ட காணிக்கை என்றும் அழைக்கப்படுகிறது) இன்டர்–ஐரோப்பிய டிவிஷனில் உள்ள ஐந்து திட்டங்களுக்கு உதவும் என்பதையும் அனைவருக்கும் ஞாபகப்படுத்துங்கள்.
- கதைக்கு முன்போ பின்போ, பதின்மூன்றாவது ஓய்வுநாள் காணிக்கையைப் பெற விருகிற டிரான்ஸ்–ஐரோப்பிய பிரிவில் உள்ள நாடுகளான பின்லாந்து, போலந்து, குரோஷியா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய இடங்களை வரைபடம் மூலம் காண்பிக்கவும்.

# காணிக்கை இலக்கு

காணிக்கை இலக்கு ஒன்றை நிர்ணயிப்பது உலகளாவிய ஊழியத்தின்மீது கவனத்தைச் செலுத்தவும், வாராந்திர ஊழியக்காணிக்கையை அதிகரிக்கவும் உதவும்.

**இலக்கை நிர்ணயித்தல்:** உங்கள் வகுப்பிற்கான வாராந்திர ஊழியக் காணிக்கை இலக்கைத் தீர்மானியுங்கள். அதை 14ஆல் பெருக்கி வருகிற தொகையை ஜூன் 27 அன்று சேகரிக்கப்படவுள்ள பதின்மூன்றாம் வாரக் காணிக்கை இலக்காக வையுங்கள்.

**பிள்ளைகளுக்கு நினைவூட்டுதல்:** சியூர்கெள் கொடுக்கிற வழக்கமான வாராந்திர ஊழியக் காணிக்கைகள் உலகளாவிய திருச்சபையின் ஊழியப்பணிகளுக்கு உதவுகின்றன என்பதையும், இதில் நான்கில் ஒரு பங்கு நேரடியாக கிழக்கு-மத்திய ஆப்பிரிக்கப் பிரிவின் திட்டங்களுக்குச் செல்லும் என்பதையும் அவர்களுக்கு நினைவூட்டுங்கள்.

**அறிக்கை அளித்தல்:** ஜூன் 20 அன்று, இந்த காலாண்டில் சேகரிக்கப்பட்ட ஊழியக்காணிக்கைபற்றிய அறிக்கையைச் சமர்ப்பியுங்கள்.

**ஊக்குவித்தல்:** வரவிருக்கும் பதின்மூன்றாவது ஓய்வுநாளில், பிள்ளைகள் தாங்கள் மற்ற வாரங்களில் கொடுக்கிற காணிக்கையைவிட இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமாகக் கொடுக்கும்படி அவர்களை ஊக்குவியுங்கள்.

**பதிவு செய்தல்:** ஓய்வுநாள் பள்ளி முடிவில், காணிக்கையை எண்ணி, கொடுக்கப்பட்ட தொகையை சபையாருக்கு அறிவியுங்கள். காணிக்கை பற்றிப் பேசுகிற நேரம் சலிப் பூட்டுவதாக இருக்கக்கூடாது

மேலும் படிக்க:

ஊழிய அறிக்கைபற்றி அதிகம் அறிய நீங்கள் செல்லவேண்டிய இணையதளம்

***http://sspm.gc.adventist.org/ss/missqu.html***

இந்த இணையதளத்தில் ஊழிய அறிக்கை சம்பந்தமான புகைப்படங்களைக் காணலாம். அவற்றை எடுத்து, பவர் பாய்ண்ட் (Power Point) மூலமாகத் திரையில் காட்டலாம். ஊழிய அறிக்கையைக் கேட்கிற சபையார் கூர்ந்து கவனிப்பதற்கு இது உதவியாக இருக்கும்.

Translated by ***Marshal Isaac and Ezra David***
Printed by ***Pr. Franklin Solomon*** in ***Oriental Watchman Publishing House, Pune***.